வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

14.02.2021 ஞாயிற்றுக்கிழமை




கல்வி TV CHANNEL-1

உங்கள் கல்வித் தொலைக்காட்சியில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் தினமும் மாலை 7 மணிக்கு க.பொ.த. சாதாரண தர பரீட்சை வழிகாட்டி வினாத்தாள் நேரலையாக...

# ஜெனிவா கூட்டத்தொடர் இம்முறை இணைய வழியாகவே நடைபெறும்

## வெளிவிவகார அமைச்சில் இருந்தே அமைச்சர் தினேஷ் உரையாற்றுவார்

கொழும்பு, பெப்.14

ஜெனிவாவில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் பெரும்பாலான நிகழ்ச்சிகள் இணைய வழியாகவே நடைபெறும் எனத் தெரியவருகின்றது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும் கொழும்பிலிருந்து இணைய வழியாக உரையாற்றுவதற்கே திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போதைய கொரோனா நிலைமைகளைக் கருத்தில்கொண்டு இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சுவிற்சர்லாந்தில் தற்போது பெருமளவுக்கு பொது முடக்கம் நடைமுறையில் உள்ளது. வெளிநாட்டவர்கள் செல்ல முடியாத நிலை உள் 02

# இலங்கைக் குடியரசு என்று நாட்டின் பெயரை மாற்றுக!

## பௌத்தம் அரச மதமாக்கப்படவேண்டும் பிவித்துரு ஹெல உறுமய முன்மொழிவு



கொழும்பு, பெப்ரவரி 14

நாட்டிற்காக புதிய அரசமைப்பை இயற்றும்போது இலங்கையின் பெயரை மாற்றவேண்டும் என்று பிவித்துரு ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், 2,300 ஆண்டுகளாக பௌத்தம் நாட்டின் பெரும்பான்மையினரின் மதமாக உள்ளது. பௌத்தத்தை இலங்கையின் அரச மதமாக மாற்ற முன்மொழியப்பட்டது என்று பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். 02

# தமிழ் தேசிய கட்சிகள் இன்று கூடுகின்றன!

யாழ்ப்பாணம், பெப். 14

தமிழ் தேசிய கட்சிகள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடவுள்ளன.

இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ் புறநகரிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர்.

எம்.கே.சிவாஜிலிங் 02

# பலாலி விமான நிலைய மேம்பாடு இந்தியா–இலங்கை மீண்டும் பேச்சு

கொழும்பு, பெப். 14

பலாலி விமான நிலையத்தை பிராந்திய மற்றும் சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்வது குறித்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பேச்சுக்கள் மீண்டும் 02

# கொரோனா மரணம் 390 ஆக அதிகரிப்பு!

கொழும்பு,பெப்.14

இலங்கையில் இறுதியாக 6 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 390 ஆக அதிகரித்துள்ளது.

இறுதியாக பதிவாகிய கொரோனா மரணங்களில் 3 பெண்களும், 3 ஆண்களும் அடங்குகின்றனர்.

இதன்படி பண்டாரகம பகுதியைச் சேர்ந்த 83 வயது பெண்ணொருவர் அவரது வீட்டில் உயிரிழந்தார். ஹபராதுவ பகுதியைச் சேர்ந்த 70 வயது பெண்ணொருவர், ஐ.டி.எச். வைத்தியசாலையில் உயிரிழந்தார். 02

# வடக்கில் நேற்று நால்வருக்கு கொரோனா தொற்று உறுதி!

யாழ்ப்பாணம், பெப்.14

வடக்கு மாகாணத்தில் மேலும் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் இருவர் கிளிநொச்சியிலுள்ள ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 02

# நேற்று மட்டும் 796 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

கொழும்பு,பெப்.14

நாட்டில் நேற்று மட்டும் 796 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 74 ஆயிரத்து 852 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று மாலை மேலும் 428 பேருக்கும், இரவு மேலும் 368 பேருக்கும் கொரோனா தொற்று 02

# அரசுடன் இணையார் ரிஷாத்!

எந்த நிபந்தனைகளும் இன்றி தான் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க தீர்மானித்திருப்ப தாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினரான ரிஷாத் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனை உறுதி செய்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், வெளியான செய்திகளில் எந்தவொரு உண்மையும் கிடை யாது. அரசாங்கத்துடன் நான் இணைவதாக வெளியாகியுள்ள செய்திகளை நிராகரிக்கிறேன் என்றார்.

# இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கு உலக நாடுகள் தயார் நிலையில்!

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தகவல்



கொழும்பு,பெப்.14

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படக்கூடிய எந்தக் குற்றச்சாட்டையும் எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் 02

# நான் மட்டும் பொலிஸ் உடையில் இருந்திருந்தால் பேரணி சென்றோரின் கால்களை முறித்திருப்பேன்!

## மேர்வின் சில்வா காட்டமாகக் கருத்து



கொழும்பு,பெப்.14

சிங்களவர்கள் போராட்டத்தில் ஈடுபடும்போது காலிமுகத்திடலில் வைத்து திருப்பியனுப்பும் அரசாங்கம், தமிழர்களை இவ்வளவு நீண்ட பேரணி செல்வதற்கு அனுமதித்திருக்கின்றது. நான் மட்டும் அந்த இடத்தில் பொலிஸ் சீருடையில் இருந்திருந்தால் அத்தனை பேரினதும் கால்களையும் உடைத்து விரட்டியிருப்பேன் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். 02

## இலங்கைக்கு...

குணவர்த்தன தெரிவித்துள்ளார். இதேவேளை, மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக பல உலக நாடுகள், ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் தெரிவித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நிராகரிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம்

## நான் மட்டும்...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தமிழ் கல்விமான்கள் கூட இதே நாட்டில்தான் வாழ்ந்தார்கள்.

அப்படிப்பட்ட இடத்தில் எங்கிருந்தோ வந்து பாராளுமன்றில் நுழைந்தவர்கள் செய்கின்ற எல்லாவற்றுக்கும் தலையாட்ட முடியாது.

அனைவருக்கும் ஒரே நீதி இருக்க வேண்டும். சிங்கள மக்களே விழித்துக் கொள்ளுங்கள். இவற்றுக்கு எதிராக நாங்கள் போராட்டத்தில் குதிப்போம். என்னை யார் தடுக்கிறார்கள் என்று பார்க்கலாம்.

உங்களுக்குத் தலைமை வகிக்க நான் தயாராக இருக்கின்றேன். ராஜபக்ஷக்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். தயவு செய்து முதுகெலும்பு உடைந்தவர்கள் போன்று நடந்துகொள்ளாதீர்கள்.

சிங்களவருக்கு பிடித்த மாதிரியோ, தமிழருக்கு பிடித்த மாதிரியோ, முஸ்லிம்களுக்குப் பிடித்த மாதிரியோ ஆட்சி நடத்த அரசாங்கம் தேவையில்லை.

கொரோனாவால் இறந்தவர்களின் உடல்களை எரிப்பதா? புதைப்பதா? நேராக வைப்பதா? குறுக்காக வைப்பதா? என்பது பற்றி நாங்கள் பேசத் தேவையில்லை.

அந்த முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை சுகாதாரத்துறையிடம் ஒப்படையுங்கள். அவற்றைப் பற்றி முழுதாக அறிந்த வைத்தியர்களிடம் ஒப்படையுங்கள்.

நான் ஒரு தூய சிங்கள பௌத்தன். இது ஒரு சிங்கள பௌத்த நாடு. நாங்கள் புத்தரின் போதனைகளைப் பின்பற்றுவதால் ஏனைய மதங்களுக்கு மதிப்பளிக்க கடமைப்பட்டிருக்கின்றோம். அதற்காக அவர்கள் செய்வதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது-என்றார். (அ-எ)

## வடக்கில் நேற்று...

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 340 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 4 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். கரைச்சியில் உள்ள மற்றொரு ஆடைத்தொழிற்சாலையில் கடந்த வாரம் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையவருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த வெளிநாட்டிலிருந்து வருகை தந்த ஒருவர் நெஞ்சுவலி காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (அ-எ)

ஏற்கனவே எடுத்துள்ளது. ஆணையாளரின் அறிக்கையில் இலங்கைக்கு அவதூறு ஏற்படுத்தும் 16 விடயங்கள் காணப்படுகின்றன.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படக்கூடிய குற்றச்சாட்டுக்களை எந்த வேளையிலும் எதிர்கொள்வதற்கு இலங்கை தயாராகவுள்ளது. ஜனாதிபதியும், பிரதமரும் பல நாடுகளின் தூதுவர்களுடன் மனித உரிமைகள் பேரவை தொடர்பில் விவாதித்துள்ளனர். அவர்கள் இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயார் எனத் தெரிவித்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் தனது அறிக்கையை 24 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் வெளியிட்டு வைத்து உரையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் பதிலுரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## நேற்று மட்டும்...

உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் 796 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

இந்தத் தொற்றாளர்கள் அனைவரும் ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிக்கையை சுகாதார மேம்பாட்டுப் பணியகம் வெளியிட்டுள்ளது.

நேற்று மேலும் 847 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் இதுவரை 67 ஆயிரத்து 831 பேர் குணமடைந்துள்ளனர்.

7 ஆயிரத்து 484 தொற்றாளர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருதுடன் 665 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வருகின்றனர். எனினும் கொரோனா தொற்றால் இதுவரை 390 பேர் உயிரிழந்தனர். (அ-எ)

## கொரோனா...

நிட்டம்புவ பகுதியைச் சேர்ந்த 77 வயது ஆண்ணொருவர் வத்துப்பிட்டிவல வைத்தியசாலையில் உயிரிழந்தார். நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 46 வயது பெண்ணொருவர், அங்கொடை ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கண்டிப் பகுதியைச் சேர்ந்த 69 வயது ஆண்ணொருவர் கண்டி போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார். நாராங்கொட பகுதியைச் சேர்ந்த 53 வயது ஆண்ணொருவர், அங்கொடை வைத்தியசாலையில் உயிரிழந்தார். (அ-எ)

## இலங்கை...

புதிய அரசமைப்பில் சேர்க்கப்பட வேண்டிய 13 அம்ச ஆவணத்தை கொழும்பில் அமைச்சர் உதய கம்மன்பில நேற்று வெளியிட்டார்.

அதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை அதிகாரபூர்வமாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு என்று குறிப்பிடப்படுகின்றது.

ஒரு நாடு ஜனநாயக அல்லது சோசலிசமாக இருக்க வேண்டும். எனவே நாட்டின் பெயரை இலங்கை குடியரசு என்று மாற்ற முன்மொழிந்தார்.

இலங்கை ஒரு ஒற்றையாட்சி நிலையாக இருக்க வேண்டும். நாட்டை பிளவுபடுத்துவதற்கான வெளிப்புற அச்சுறுத்தல்கள் எதுவும் ஏற்படாமல் இருக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

புவியியல் இருப்பிடம் காரணமாக இலங்கை 500 ஆண்டுகளுக்கும் மேலாக வெளிநாட்டு சக்திகளால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றது. எனவே வெளிப்புற தலையீட்டைத் தடுக்க கூடுதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்-என்றார்.

# புதிய வகை கொரோனா தொற்றால் தொற்றாளர் எண்ணிக்கை உயரலாம்

**ஹரித அளுத்கே கூறுகிறார்**

புதிய வகை கொரோனா தொற்று காரணமாக எதிர் வரும் நாட்களில் நாளாந்தம் பதிவாகும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நூற்றுக்கு 50 வீதத்திற்கும் அதிக மானவர்களுக்கு புதிய வீரியம் கொண்ட வைரஸ் பரவக் கூடும் என ஜயவர்தனபுர ஆய்வுக்கூட தகவல்கள் தெரிவிக்கின்றன என அந்த சங்கத்தின் வைத்தியர் ஹரித அளுத்கே ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை 800 இல் இருந்து 1200 வரை அதிகரிக்கக் கூடும். எனவே இதனைக் கட்டுப் படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும் என வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

# கொவிட் -19 தடுப்பூசியை சிறுவருக்கு செலுத்த பரிசோதனை முன்னெடுப்பு

கொழும்பு, பெப். 14

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் அஸ்ட்ராஜெனகா கோவிட்-19 தடுப்பூசி மருந்துகளைக் சிறுவர்களுக்குச் செலுத்தும் பரிசோதனை தொடங்கப்பட்டுள்ளது.

“இடைக்கால சோதனையாக, அஸ்ட்ராஜெனகா கோவிட்-19 தடுப்பூசி மருந்தைக் சிறுவர்களுக்குச் செலுத்தும் பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது.

6 முதல் 17 வயதுக்குட்பட்டவர்களுக்கு இந்தப் பரிசோதனை நடத்தப்பட உள்ளது” என்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

# கொழும்பு குப்பைகளிலிருந்து மின் உற்பத்திக்கு தீர்மானம்

கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்காக முத்துராஜவெல பகுதியில் 10 மெகாவாட் மின் சாரத்தை உற்பத்தி செய்யும் மின் நிலையத்தின் நிர் மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

இதனூடாக கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒரு நாளில் சேகரிக்கப்படும் 700 தொன் குப்பையிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் குப்பை பிரச்னைக்குத் தீர்வு கிடைப்பதுடன், மின் சக்தியும் சேகரிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாளொன்றில் 700 தொன் குப்பையிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் எனவும் இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

# வாகனங்களில் திருடியவர் கைது!

வாகனங்களில் பக்கக் கண்ணாடிகளைத் திருடிய சந்தேக நபரை காவற்துறையினர் கைது செய்துள்ளனர்.

கொலன்னாவை பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின் பக்க கண்ணாடியைத் திருடிய நபரை தெமட்ட கொடை காவற்துறையினர் கைது செய்துள்ளனர்.

வாகனங்களில் 16 பக்கக் கண்ணாடிகளை பை ஒன்றில் இட்டு துவிச்சக்கர வண்டி சென்றுகொண்டிருந்த சந்தேக நபரை போக்குவரத்து காவற்துறையினர் கைது செய்துள்ளனர்.

பஞ்சிகாவத்தை பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேக நபர் திருடிய பக்கக் கண்ணாடிகளை வாகன உதிரிப்பாக விற்பனையாளர்களுக்கு விநியோகித் துள்ளதாக ஆரம்பக்கட்ட விசார ணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை காவற்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ் தேசிய...

கத்தின் ஏற்பாட்டில் இந்த சந்திப்பு நடக்கின்றது.

அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது. இந்தவகையான சந்திப்புக்களில் இதுவரை தனியாக அழைக்கப்படாத ஜனநாயகப் போராளிகள் கட்சியினரும் இன்று அழைக்கப்பட்டுள்ளனர்.

## பலாலி விமான...

ஆரம்பிக்கப்படவுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் அடுத்த வாரம் தொடங்கவுள்ளதாக விமான போக்குவரத்து அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

விமான நிலையத்தின் வளர்ச்சியில் இந்திய முதலீடு, இந்திய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க விமான நிலையத்தைப் பயன்படுத்துதல் மற்றும் பிற தொடர்புடைய விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

இத்திட்டத்திற்கான நிதியுதவியை இந்திய அரசு வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவா...

ளது. இதனால், பெரும்பாலான நிகழ்வுகளை இணைய வழியாக நடத்துவதற்கு மனித உரிமைகள் பேரவையின் ஏற்பாட்டுக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இணைய வழியில் இதனை நடத்துவதற்கான முடிவை இலங்கை உட்பட பல நாடுகள் எதிர்த்ததாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவலுக்கு மத்தியில் பாதுகாப்பான முறையில் இதனை நடத்துவதற்கான வாய்ப்பிருப்பதாக இந்த நாடுகள் சுட்டிக்காட்டியிருந்த போதிலும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இவ்வாறான முடிவை எடுத்திருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் இலங்கைத் தூதுக்குழு கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்திலிருந்து இணைக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர், தானும் அங்கிருந்தே உரையாற்றுவதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். (அ-எ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
13.02.2021 சனிக்கிழமை
சார்வரி, மாசி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# ஐ.நா.வை நம்பவேண்டாம்

இலங்கை விவகாரத்தில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை காத்திரமான தலையீடுகளை செய்யவேண்டுமென்பதை வலியுறுத்தி, மூன்று பிரதான கட்சிகளின் தலைவர்களது கையெழுத்தெழுத்துடன் அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அதில் இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துமாறு கோரப்பட்டிருந்தது. பின்னர், கட்சிகளின் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையிலேயே, பொத்துவில் தொடங்கி பொலிகண்டிவரை - எழுச்சி பேரணியும் இடம்பெற்றது. மக்களும் பல்லாயிரக்கணக்கில் பங்குகொண்டு பேரணியை வெற்றிபெறச் செய்தனர்.

பேரணியின் இறுதியில், சர்வதேச கண்காணிப்புடன் தமிழ் மக்கள் தங்களுக்கான அரசியல் தீர்வை அடையக்கூடியவாறான, பொது சன வாக்கெடுப்பு தொடர்பில் கோரப்பட்டிருந்தது. புலம்பெயர் அமைப்புக்களினால் முன்தள்ளப்படும் இவ்வாறான கோரிக்கையை அண்மைக்காலமாக வடக்கில் இயங்கும் ஒருசில அரசியல்வாதிகளும் உச்சரிக்கின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மேற்படி பேரணியின் இறுதியில் வாசிக்கப்பட்ட பிரகடனத்திலும் இந்த விடயம் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் மீதான நம்பிக்கையின் அடிப்படையில்தான் மூன்று கட்சிகளும் ஆணையாளருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தன. ஐக்கிய நாடுகள் சபையின் மீதான நம்பிக்கையில்தான், புலம்பெயர் அமைப்புக்கள் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளை துரத்தித் திரிகின்றனர். மாறி, மாறி அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். ஐ.நா.வின் மீதான நம்பிக்கையின் அடிப்படையில்தான் காணாமல் போனோரின் உறவினர்கள் இப்போதும் வீதிகளில் நின்று கொண்டிருக்கின்றனர்.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் உதவிச் செயலாளர் நாயகம் சார்ள்ஸ் பெட்ரே, ஐ.நாவை நம்பாதீர்கள் - நீங்கள் விரும்பும் விடயங்களை செய்வதற்கான ஆற்றலுடன் அதன் கட்டமைப்புக்கள் இல்லையென்று கூறியிருக்கின்றார். உலகத் தமிழர் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட செயலிவழி கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பிலான விரிவான மீளாய்விற்காக, ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவிற்கும் சார்ள்ஸ் பெட்ரே தலைதாங்கியிருந்தார். இறுதி யுத்தத்தின்போதான விடயங்களை விரிவாக ஆராய்ந்த சார்ள்ஸ் குழு, ஐ. நாவின் இலங்கைக்கான குழு, ஐ. நாவின் கட்டமைப்புக்களான மனித உரிமைகள் பேரவை, பாதுகாப்புப் பேரவை மற்றும் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் ஆகியவை இலங்கை விடயத்தில் தோல்வியடைந்திருப்பதாக தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியது. அதாவது, இறுதி யுத்தத்தின்போது, தமிழ் மக்களை காப்பாற்றுவதில் ஐ. நாவின் கட்டமைப்புக்கள் தோல்விடைந்துவிட்டன.

இந்த அனுபவங்களின் அடிப்படையில்தான், ஐ.நா.வை நம்பிக்கொண்டிருக்க வேண்டாமென்று சார்ள்ஸ் தெரிவித்திருக்கின்றார். அவர் இவ்வாறு கூறுகின்றபோது, குறித்த கலந்துரையாடலில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் உடனிருந்தார். கேள்வி - ஐ. நாவின் முன்னாள் உயரதிகாரி ஒருவரே ஐ.நாவை நம்ப வேண்டாமென்று கூறுகின்ற போது, ஐ. நாவை நம்பி வீதிகளில் இறங்கி போராடிக் கொண்டிருக்கும் மக்களின் நிலைமை என்ன? அவ்வாறாயின், சிவில் சமூகமென்னும் பெயரில், ஐ.நாவை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் பெறுமதி என்ன? அனைத்துமே விழலுக்கிறைக்கும் நீரா?

ஒரு வகையில் இவ்வாறான வாதங்களின் உள்ளடகத்தை அவதானித்தால், ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது, என்னதான் முயன்றாலும், இறுதியில் நாட்டுக்குள்தான் நீங்கள் தீர்வை தேடவேண்டும். தற்போதிருக்கின்ற அரசாங்கம் அதற்கு ஒத்துவரவில்லையென்றால், ஆட்சி மாறும் வரையில் காத்திருங்கள். ஐ.நாவை நம்பிக்கொண்டிருக்கவேண்டாம் என்று கூறுப்படுவதன் பொருள் இதுவாகத்தானே இருக்க முடியும்!

# சீன ஆதிக்க விஸ்தரிப்பை முன்னிறுத்தி இலங்கை விவகாரத்தை இந்தியா, அமெரிக்கா ஜெனிவாவில் அணுகும் சாத்தியம் !

- அலசுவது **இராஜதந்திரி** -

ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 46ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் ஒரு சில தினங்களே இருக்கும் தறுவாயில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் இலங்கை தொடர்பாக இத்தடவை கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கு இந்தியாவின் ஆதரவை கோரியுள்ளார்.

அதேவேளை, கொழும்பில் பௌத்த மத குருமார்கள் சிலரைச் சந்தித்த பிரதமர் மஹிந்த ராஜபக்,ஷ ஜெனிவா கூட்டத் தொடரை பௌத்த நாடுகளின் துணை கொண்டு கையாளப்போவதாக தெரிவித்துள்ளார்.

பௌத்த மதம் உலகில் முக்கிய மதங்களில் ஒன்றாக மதிக்கப்படுகின்றது. குறிப்பாக, தென் கிழக்காசியாவில் உள்ள பல நாடுகளில் பௌத்த மதம் போற்றப்பட்டு வருகின்றது.

இருந்தபோதிலும் பௌத்த மதத்தை பின்பற்றுகின்ற நாடுகள் புனிதமான முறையில் அம்மதத்தை மதித்து வருகின்றனவே தவிர, இலங்கையில் போல அரச மதம் என்று அறிவிக்கப்பட்டோ அல்லது அந்நாடுகளில் உள்ள பௌத்த துறவிகள் அரசியலில் பிரவேசித்து அடாவடித்தனங்களை மேற்கொண்டு வருபவர்களாகவோ காணப்படவில்லை.

**மனிதனும் தெய்வமாகலாம்**

பௌத்த மதம், மனிதனும் தெய்வீக நிலையை அடையலாம் என்பதனையும், வாழ்வில் அன்பு, கருணை, காருண்யம், கொல்லாமை, ஈவிரக்கம் மற்றும் உண்மை, நேர்மை என்பவற்றோடு வாழ்ந்தால் மானிட வாழ்வின் இக்கட்டான நிலபரங்களில் இருந்து விடுபடலாம் என்பதனை நடைமுறைச் சாத்தியமான முறையில் போதித்தும் நிற்கின்றது.

ஏனைய மதங்களில்போல, பிரச்னைகளைச் சந்திக்கும் போது கடவுளை வேண்டுவது, கிரியைகளை செய்வதென் பதையெல்லாம் பற்றி பௌத்தத்தின் பிரதான நூலான தர்மபதம் எதனையும் குறிப்பிடவில்லை.

ஏறத்தாள திருவள்ளுவரின் திருக்குறளுடனும், மகாபாரதத்தின் பகவத்கீதையுடனும் ஒத்திசைவாகப்போகின்ற தன்மையே பௌத்த மதத்தின் பிரதான நூலான தர்மபதத்தில் காணப்படுகின்றது.

மகாத்மா காந்தியடிகள்கூட, இந்திய சுதந்திர பேராட்டத்தில் இக்கட்டான நிலபரங்களை தாம் சந்தித்தபோது பகவத் கீதையின் போதனைகளே தமக்கு சவால்களைச் சந்திக்கக்கூடிய மனப்பக்குவத்தைக் கொடுத்திருந்தன என்று குறிப்பிட்டுள்ளார்.

**இலங்கையின் முதல் அரசியல் படுகொலை**

ஆனால், சுதந்திர இலங்கையில் முன்னாள் பிரதமரான எஸ். டபிள்யு. ஆர். டி பண்டார நாயக்காவை கொலை செய்ததன் மூலம் முதலாவது அரசியல் கொலையை மேற்கொண்டது ஒரு பௌத்த பிக்குவாக (புத்த ரக்கித்த தேரர்) இருக்கின்ற நிலையில், இன்று வரை இலங்கையில் புத்த பிக்குமாரின் ஆதிக்கம் அரசியலில் வெகுவாகவே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதன் காரணமாகவே, தம்மைச் சந்தித்த பௌத்த பிக்குமார்களிடம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பௌத்த நாடுகளின் துணையோடு ஜெனிவா விவகாரத்தை இலங்கை கையாளும் எனக்குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டதை நோக்கும்போது, பௌத்த நாடுகள் என்ற வகையில் புத்த பகவான் அவதரித்த நேபாளத்தில் பௌத்த மதம் காணப்படுகின்ற போதிலும், அந்நாடு இந்துக்களையே பெரும்பான்மையாகக்கொண்ட நாடாக விளங்குகின்றது.

இந்திய உபகண்டத்தில் வடக்கே திபெத் தேசம் உட்பட பல்வேறு பிரதேசங்களிலும் பௌத்த மதம் செறிந்து காணப்படுகின்ற போதிலும், இந்துமத செல்வாக்கே அதிகளவில் காணப்படுகின்றது.

ஜப்பான், தென்கொரியா, மற்றும், சீனா, தாய்வான், மியன்மார், வியட்நாம், தாய்லாந்து போன்ற நாடுகளில் பௌத்த மதம் பெரிதும் பின்பற்றப்படுகின்ற போதிலும், அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட நாடுகள் கைத்தொழில் ரீதியாக மிகவும் வளர்ச்சி கண்டவையாகவும், பௌத்த நாடுகள் என்று மத ரீதியாக இலங்கையைப்போன்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாதவையாகவுமே இருக்கின்றன.

இதன் காரணமாகவே, இந்நாடுகள் பொருளாதார ரீதியாகவும் வளர்ச்சி கண்ட நாடுகளாக இருக்கின்றன.

எனவே, இத்தடவை அமெரிக்காவும் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மீளவும் இணைந்துள்ள நிலையில், இந்தியாவும் ஏனைய மேலைத்தேய நாடுகளும் தென்னாசியாவில் சீனாவின் ஆதிக்க விஸ்தரிப்பை முன்னிறுத்தியே இலங்கை விவகாரத்தை ஜெனிவாவில் கையாளக் கூடிய சாத்தியக்கூறுகள் பலமாக இருக்கின்றன. ●

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பெப்ரவரி - 14 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி வருடம் - மாசி - 2
நல்ல நேரம் : 7.30 - 9.00
எமகண்டம் : 12.00 - 1.30
திதி : திரிதியை




**மேடம்**

மற்றவர் குறை நிறைகளை உணர்ந்து அனுசரித்து வெல்வீர்கள். நேர்மறை எண்ணங்கள் பரவும்படி செயல்கள் செய்வீர்கள். முடிந்த விஷயங்களைத் தொடர முயற்சி செய்வீர்கள்.

**இடபம்**

மற்றவர்களைப் புரிந்து கொள்ள முயற்சி செய்வீர்கள். குடும்ப பெரியவர்களை அவமதிக்காமல் கவனமாக இருங்கள். அகங்காரம் கொண்டவர்ளைச் சரியாயாக கையாளுவீர்கள்.

**மிதுனம்**

முன்னேற்றம் அளிக்கும் முக்கிய நபர்களை சந்திப்பீர்கள். நண்பர்கள் இன்று நல்ல செய்தியை கொண்டு வருவர். பணத்தேவைகள் தீரும். எதிரிகளைப் புறக்கணியுங்கள்.

**கடகம்**

அறிவுப்பூர்வமாக செயல்பட்டு பிரச்னையை வெல்வீர்கள். கிண்டல் செய்வதாய் நினைத்து யாரையும் புண்படுத்த வேண்டாம். பொறுப்பை நிறைவேற்றுவதில் மிகுந்த கவனமாக இருங்கள்.

**சிம்மம்**

அலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து மகிழ்ச்சி தரும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உங்களுக்கு வாய்ப்புகள் வரும். உங்களை மேம்படுத்திக் கொள்ளும் முயற்சியில் வெல்வீர்கள்.

**கன்னி**

பரபரப்பாக செயல்பட்டு எண்ணத்தை நிறைவேற்றுவீர்கள். பக்கத்தில் இருப்பவர்களை அனுசரித்து நன்மை அடைவீர்கள். எதிர்பாராத நன்மை உண்டு. சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

**துலாம்**

குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். முயற்சி வெற்றி தரும்.பேச்சுவார்த்தைகள் நல்லபடி முடிவாகும். நல்லவர் ஆதரவு உண்டு.அனுபவசாலியின் ஆலோசனையை ஏற்று நடப்பது நல்லது.

**விருச்சிகம்**

பணம் விரைவாகச் செலவாகும். ஆன்மிகப் பற்று அதிகரிக்கும். எண்ணிய எதையும் திட்டமிட்டுச் செய்து பலன் அடைவீர்கள். ஆன்மிக விஷயத்திற்காக செலவு செய்வீர்கள். மன உறுதி கூடும்.

**தனுசு**

உழைப்பைக்கூட்டி அதற்கான நற்பலன்களை அடைவீர்கள். எது நடந்தாலும் அது நன்மைக்கே என்று உணர்வீர்கள். கடுமையான வார்த்தைகளால் யாரையும் விமர்சிக்காதீர்கள்.

**மகரம்**

முன் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. பெரியவரின் ஆலோசனையை ஏற்று நன்மை அடைவீர்கள். சமமாக நடந்து நேர்மையை நிரூபிப்பீர்கள். அமைதி நிலவும்.

**கும்பம்**

உங்கள் பலம் எது பலவீனம் எது என்று உணர்வீர்கள். வாழ்க்கைத் துணையின் நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தேவைகள் நிறைவேறும். பிள்ளைகளின் வாழ்வு மேம்படும்.

**மீனம்**

நண்பர்களை சந்திக்கும்போது பழசைக் கிளற வேண்டாம். இறுக்கமான சூழலைத் தாங்கும் மன உறுதி ஏற்படும். திடீர்ப் பயணம் தித்திக்கும். பிரபலத் தொடர்பு வெற்றி தரும்.

# ஜனாதிபதியின் இராணுவ ஆட்சியே தமிழர் பேரணிக்கு முக்கிய காரணம்

## சாடுகின்றார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, பெப். 14

**“இலங்கையில் தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது. இந்த ஆட்சியால் சீற்றமடைந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இன்று ஐ.நாவிடம் நீதி வேண்டி ஜனநாயக வழியில் போராட்டங்களையும், பேரணிகளையும் முன்னெடுக்கின்றனர்.”**

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தமிழ்பேசும் மக்கள் மீதான அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும், சர்வதேசத்திடம் நீதி கோரியும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் வடக்கு, கிழக்கு தமிழ்ச் சமூகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பேரணி தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் இடம்பெற்ற பேரணியைப் பல வழிகளில் தடுத்துநிறுத்த அரசு முற்பட்டது. எனினும், வடக்கு, கிழக்கில் பெரும் எண்ணிக்கையில் தமிழ் மக்கள் திரண்டு பேரணியை நடத்தியுள்ளனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்கள், அரசுக்கும் இராணுவத்துக்கும் எதிராகவே கோஷங்களை எழுப்பினார்கள். சிங்கள மக்களுக்கு எதிராக அவர்கள் எந்தக் கோஷங்களையும் எழுப்பவில்லை.

நாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இராணுவ ஆட்சியே தற்போது நடைபெறுகின்றது. அதனால் சீற்றமடைந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இன்று ஐ.நாவிடம் நீதி வேண்டி ஜனநாயக வழியில் போராட வேண்டிய நிலைக்கு வந்துள்ளனர்.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் எமது அரசுக்கு எதிராக தமிழ் மக்கள் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்கவில்லை. ஆனால், இந்த ஆட்சி தமிழ் மக்களை நீதி கேட்டுப் போராடத் தள்ளியுள்ளது.

இந்தநிலையில், பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் பங்கேற்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று அரச தரப்பினர் வெளியிட்டுள்ள கருத்துக்கு எமது கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ் மக்களைப் போராடத் தள்ளிய அரச தரப்புக்கு எதிராகவே முதலில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டால் அதற்குக் கோட்டாபய அரசே முழுப் பொறுப்பு - என்றார்.

# தனி வழி செல்ல தயாராகும் ம.ம.மு. கட்சியைப் பலப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, பெப். 14

மலையக மக்கள் முன்னணி தனிவழி பயணத்துக்கு தயாராகின்றது என தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், கட்சியையும், தொழிற்சங்க நடவடிக்கையையும் பலப்படுத்தும் நடவடிக்கையில் முன்னணி இறங்கியுள்ளது.

இதன்படி முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணனின் ஆலோசனையின் பிரகாரம் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை உயர்பீட உறுப்பினரும், தொழிற்சங்கப் பிரிவின் நிதிச் செயலாளருமான புஷ்பா விஸ்வநாதன் மேற்கொண்டு வருகின்றார். கடந்த வியாழன் உடபுஸல்லாவ பகுதியில்கூட மறுசீரமைப்பு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

20 ஐ ஆதரித்த மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினர் அரவிந்தகுமாருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை, அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு தன்னிச்சையான முறையில் ஆதரவு உட்பட முன்னணியின் சில தன்னிச்சையான நடவடிக்கைகளால் முற்போக்கு கூட்டணியின் இதர பங்காளிகள் கடும் அதிருப்தியில் இருக்கின்றன.

இனிவரும் தேர்தல்களில் மலையக மக்கள் முன்னணி இன்றியே போட்டியிட வேண்டும் எனவும் கூட்டணி உறுப்பினர்கள் வலியுறுத்திவருகின்றனர். இந்நிலையிலேயே தனி வழிக்கான ஆயத்தங்களில் ராதா இறங்கியுள்ளார்.

(அ)

# பெண்ணை அச்சுறுத்திய பொலிஸ் அதிகாரி மறியலில்

பெண் ஒருவரை அச்சுறுத்தியதாக கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரை நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் தலாத்து ஓயா பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றிய 53 வயதான நபர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த வீட்டில் உள்ள பெண் ஒருவருக்கே இவ்வாறு சந்தேக நபர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொருட்களின் விலை குறைப்பால் சதொசவின் வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 14

27 அத்தியாவசிய நுகர்வோர் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டதன் மூலம் மூன்று நாட்களில் சதொச, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களின் வருமானம் சாதனை அளவுக்கு உயர்ந்துள்ளது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

குறித்த 27 அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு முன்னர் சதொச விற்பனை நிலையங்களில் நாளாந்த வருமானம் சுமார் 82 மில்லியன் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில், பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் நாளாந்த வருமானம் சுமார் 166 மில்லியனாக அதிகரித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை முதல் 27 அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க வர்த்தக அமைச்சர் தீர்மானித்த நிலையில், குறித்த பொருட்களை நுகர்வோர் லங்கா சதொச, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் கியூ கடைகள் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டு பருவ காலம் முடியும் வரை 03 மாத காலத்துக்கு இந்தச் சலுகை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர்கள் வீதியில் இறங்க ராஜபக்ஷக்களே காரணம்



## சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 14

**வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், சர்வதேசத்திடம் நீதி கோரி வீதியில் இறங்கிப் போராட ராஜபக்ஷக்களின் கொடூர ஆட்சியே காரணமாகும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

இலங்கை அரசின் தமிழ் பேசும் மக்கள் மீதான அடக்குமுறைகளைக் கண்டித்தும், சர்வதேசத்திடம் நீதி கோரியும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் வடக்கு, கிழக்கு தமிழ்ச் சமூகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பேரணி தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்பட்ட பேரணியின் போது தமிழ் மக்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், அவர்கள் அவ்வாறு கோரிக்கைகளை முன்வைப்பதற்கான நிலையை ஏற்படுத்தியமைக்கு ராஜபக்ஷ அரசே பொறுப்புக் கூறவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ, தமது கடந்த ஆட்சியில் ஐ.நாவுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் வழங்கியிருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் தமிழர்கள் இன்று சர்வதேசத்திடம் நீதி கோரி வீதியில் இறங்க வேண்டிய நிலை வந்திருக்க மாட்டாது.

இந்த ஆட்சியிலும் அவரின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ, தனது ஜனாதிபதி பதவியைத் துஷ்பிரயோகப்படுத்தி வருகின்றார்.

சிவில் நிர்வாகச் செயற்பாடுகளின் உயர் பதவிகளில் இராணுவத்தினரை நியமித்துள்ளதுடன் மட்டுமன்றி வடக்கு, கிழக்கில் தமிழர்களைப் பழி வாங்கும் வகையிலும் இந்த அரசு செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறான மோசமான செயற்பாடுகளே தமிழர்களைத் கொதித்தெழ வைத்துள்ளது- என்றார்.

(அ)

# 25 இளைஞர் மையங்களை நாட்டில் உருவாக்க திட்டம்



கொழும்பு,பெப்.14

அனைத்து மாவட்டங்களிலுமுள்ள கலாசார மையங்களின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரின் எண்ணக்கருவிற்கமைய ஓர் இளைஞர் மையத்தை நிறுவுவது பாராட்டத்தக்கது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள கலாசார மையங்களை விளையாட்டு மற்றும் தொழில் பயிற்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கான சாத்தியம் தொடர்பில் கலந்துரையாடும் வகையில் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

25 மாவட்டங்களிலும் இளைஞர் மையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இந்தச் சந்திப்பின்போது இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு தொகுதி அமைந்துள்ள இடத்தில் நிர்மாணிக்கப்படும் விளையாட்டு பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் கட்டட தொகுதியொன்றை சார்க் கலாசார மையத்துக்கு வழங்க முடியும் என்றும் இந்தச் சந்திப்பின்போது முன்மொழியப்பட்டது.

தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இந்த முன்மொழிவிற்கமைய செயல்பட முடியும் எனக் குறிப்பிட்டார்.

அனைவரையும் கொழும்புக்குள் மட்டுப்படுத்தாமல், சகல மாவட்டங்களிலும் பரந்து காணப்படும் வகையில் செயல்படுவது பாராட்டத்தக்கது என்று பிரதமர் வலியுறுத்தினார்.

(எ)

# மேல் மாகாணத்தில் மட்டும் 47,760 பேருக்கு கொரோனா

கொழும்பு, பெப். 14

கொரோனா வைரஸ் தாக்கத்தால் 2020 ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரை மேல் மாகாணத்தில் 47 ஆயிரத்து 760 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் நேற்று முன் தினம் அடையாளம் காணப்பட்ட 940 தொற்றாளர்களில் 618 பேர் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரை கொழும்பு மாவட்டத்தில் 27,243 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 14,865 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில்5,652 பேருக்கும், இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது.

அத்துடன் மேல் மாகாணத்திலேயே அதிகளவு உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

# சர்வதேசத்திற்கு தெளிவாகக் கேட்ட விடயம் பிரதமர் மஹிந்தவுக்கு அருகிலிருந்தோருக்கு கேட்கவில்லை

கொழும்பு, பெப். 14

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிப்பதாக பாராளுமன்றத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியது பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உள்ளடங்கலாக சர்வதேச சமூகத்துக்கு மிகத்தெளிவாகக் கேட்டிருக்கிறது. எனினும் பிரதமருக்கு மிக அருகில் இருந்தவர்களுக்கு மாத்திரமே அது கேட்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிப்பதாக பாராளுமன்றத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மிகத்தெளிவாகவே குறிப்பிட்டார்.

அது பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் உள்ளடங்கலாக சர்வதேசத்திலுள்ள பலருக்கும் மிகத்தெளிவாகக் கேட்டிருக்கிறது. எனினும் பிரதமருக்கு மிக அருகில் இருந்தவர்களுக்கும் பின்னால் இருந்தவர்களுக்குமே அது கேட்கவில்லை. இது மிகவும் வேடிக்கையான விடயமாகும்.

அதுமாத்திரமன்றி பிரதமர் பாராளுமன்றத்திலேயே மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். வாகனத்தில் செல்லும்போது ஊடகங்களுக்குக் கூறவில்லை. எனவே பொறுப்புவாய்ந்த இடத்தில் பொறுப்புடன் வெளியிடப்பட்ட கருத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. ஆகவே கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தோரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்கும் வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்-என்றார்.

# சிறைகளில் தொற்று உறுதியானோர் எண்ணிக்கை 4,679 ஆக அதிகரிப்பு

கொழும்பு, பெப். 14

சிறைச்சாலைகளில் மேலும் இருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி அங்கு இதுவரை 4 ஆயிரத்து 679 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது.

அதில் வெலிக்கடை சிறைச்சாலையில் 903 பேருக்கும் மஹசீன் சிறைச்சாலையில் 878 பேருக்கும் மஹர சிறைச்சாலையில் 819 பேருக்கும் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதேவேளை கொழும்பு விளக்கமறியல் சிறையில் 441 பேருக்கும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் 368 பேருக்கும் இதுவரை தொற்று உறுதியாகியுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட நோயாளிகளில் 4 ஆயிரத்து 363 கைதிகளும் 132 சிறைச்சாலை அதிகாரிகளும் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளனர்.

தற்போது 150 கைதிகள் மற்றும் 22 அதிகாரிகள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவும் அபாயம்

## ஒன்றுகூடல் நிகழ்வுகளை தவிர்க்கக் கோரிக்கை

கொழும்பு, பெப். 14

பிரிட்டனில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்றின் புதிய மாறுபாடு கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டின் கோவிட்-19 அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது என்று இலங்கையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸின் புதிய மாறுபாடு காரணமாக பொது மக்கள் தேவையற்ற உட்புற நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளை நடத்த அனுமதிக்கக்கூடாது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-



தற்போதுள்ள சட்டங்களின் படி, சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்கும்போது இறுதிச் சடங்கு மற்றும் திருமண விழாக்கள் மட்டுமே நடத்த முடியும்.

தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீறும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டைப் பாதுகாக்க, எமக்கு பொதுமக்களின் முழு ஆதரவு தேவை.

கொழும்பு, அவிசாவளை, பியகம மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளிலிருந்து பிரிட்டனில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட பி 1.1.7 என அழைக்கப்படும் கொரோனா வைரஸ் திரிபு கண்டறியப்பட்டுள்ளது.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், ஜனவரி மாதத்தில் பெறப்பட்ட மாதிரிகளில் அதிக பரவுதலைக்கொண்ட பிரிட்டன் கொரோனா வைரஸ் திரிபு கண்டறியப்பட்டுள்ளது.

நிபுணர்களின் கூற்றுப்படி, இங்கிலாந்தின் திரிபு கொரோனா வைரஸின் மற்ற விகாரங்களைவிட 50 சதவீதம் அதிக பரவுதலைக் கொண்டுள்ளது - என்றார்.

# ரயில் தடம்புரண்டு சேவைகள் பாதிப்பு

கொழும்பு, பெப். 14

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகில் ரயில் ஒன்று தடம்புரண்டதில் கடற்கரை ரயில் வீதியிலான ரயில் சேவைகள் தாமதமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறையில் இருந்து வவுனியா நோக்கு பயணித்த ரஜரட்ட ரொஜின எனும் கடுகதி ரயிலே இவ்வாறு தடம்புரண்டதாக தெரிவிக்கப்பட்டது.

(அ)

# பொருளாதாரத் தடை வராதவிதத்தில் ஜெனிவா சவாலை எதிர்கொள்வோம்!

## அமைச்சர் தினேஷ் கூறுகிறார்



கொழும்பு, பெப். 14

**இலங்கைமீது பொருளாதாரத்தடைகள் விதிக்கப்படாத விதத்தில் செயற்படக்கூடிய ஆற்றல் தற்போதைய அரசுக்கு இருக்கின்றது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.**

இலங்கைமீது பொருளாதாரத் தடைகள் வரக்கூடும், இதனால் பொருளாதாரம் பாதிக்கப்படக்கூடும் என்ற அச்சம் வர்த்தகர்கள் மத்தியில் இருக்கின்றது. இது தொடர்பில் தங்கள் கருத்து என்னவென எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இலங்கையின் பொருளாதாரத்தில் கைவைப்பதற்கு சில மேற்குலக நாடுகள் முயற்சிக்கின்றன. அவ்வாறான நாடுகளுக்கும், அங்குள்ள அமைப்புகளுக்கும் யதார்த்த நிலைமை குறித்து எடுத்துரைக்கப்பட்டும். அத்துடன், அவர்கள் அறிந்திராத பல தகவல்களை முன்வைப்பதற்கு இலங்கையால் முடியுமாக இருக்கின்றது.

இலங்கையில் முற்போக்கு சக்தியொன்று நாட்டை ஆளும்பட்சத்தில் தமது நாட்டுக்கு எதிரானவற்றை தோற்கடிப்பதற்கே நடவடிக்கைகளை எடுத்துள்ளன. எனவேதான் எமக்கு ஏதோவொரு விதத்தில் அழுத்தங்களை கொடுப்பதற்கான முயற்சிகள் தொடர்கின்றன.

பொருளாதாரத்தடை, பொருளாதார வீழ்ச்சி ஆகியன குறித்து அறிவிப்புகள் வெளி வந்தாலும் அவை நடைமுறைக்கு வராத வகையில் பார்த்துக்கொள்ளக் கூடிய - செயற்படக்கூடிய ஆற்றல் இலங்கை அரசுக்கு இருக்கின்றது- என்றார்.



# ரணில் - சஜித் திடீர் சந்திப்பு

கொழும்பு, பெப். 14

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் திடீர் சந்திப்பு நடைபெற்றுள்ளது என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின்போது அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை சம்பந்தமாக இருவரும் விரிவாக கலந்துரையாடியுள்ளதுடன் கருத்துக்களை பரிமாறிக்கொண்டுள்ளனர் எனவும் அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.


இதனடிப்படையில் ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிராகச் செயற்படவும், இதற்காக ஏனைய எதிர்க்கட்சி அரசியல் சக்திகளை இணைத்துக்கொள்வது சம்பந்தமாகவும் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு தலைவர்களுக்கும் இடையிலான இந்தப் பேச்சு கடந்த புதன்கிழமை தனிப்பட்ட இடமொன்றில் நடைபெற்றுள்ளதுடன் சுமுகமான முறையில் இந்தச் சந்திப்பு நடந்தது எனவும் எதிர்க்கட்சித் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத் தேர்தல் தோல்விக்கு பின்னர் இந்த இரண்டு தலைவர்களும் இரண்டு, மூன்று முறை தனிப்பட்ட ரீதியில் சந்தித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. இந்தநிலையில், ஆணைக்குழுவின் அறிக்கை சம்பந்தமாக இந்தத் திடீர் சந்திப்பு நடந்துள்ளது.

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை சபையில் வெளியிடப்படும்

## ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவிப்பு



கொழும்பு, பெப். 14

ஈஸ்டர் தாக்குதல்கள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகளை ஒளிக்கமாட்டோம். கூடிய விரைவில் சபையில் முன்வைக்கப்படும் என்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவும், அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இவ்விரு அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏன் தாமதம் ஏற்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும், விவாதத்துக்கு நாட்கள் வழங்கப்படும் என சபை முதல்வர் குறிப்பிட்டார். அதுவே அரசின் நிலைப்பாடு. ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகள் பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்படாமல் மறைக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. நாம் அவ்வாறு செய்யமாட்டோம். ஒளிக்கவும் மாட்டோம். அறிக்கைகள் கூடிய விரைவில் முன்வைக்கப்படும். ஆளுங்கட்சி உறுப்பினர்களும் இதனையே விரும்புகின்றனர் - என்றார். (அ)

# உட்கட்சி விவகாரங்கள் பொதுவில் விவாதிக்கவேண்டியவை அல்ல!

## எஸ்.பி. திஸநாயக்க கூறுகிறார்

கொழும்பு, பெப். 14

கட்சியின் உள் விவகாரங்கள் மற்றும் கூட்டணியின் பிரச்னைகள் பொதுவில் விவாதிக்கப்படக்கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள தற்போதைய மோதல்களுக்கு தவறான புரிதல்களே காரணம்.

எந்தவொரு கூட்டணியிலோ அல்லது அமைப்பிலோ பிரச்னைகள் ஏற்படக்கூடும். இதுபோன்ற பிரச்னைகளை உட்கட்சிக்குள் விவாதிப்பதே சிறந்தது.

அத்தோடு கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளும் அரசாங்கத்தின் பொதுவான நிலைப்பாட்டை மதிக்க வேண்டும்என்பதோடு இலக்கை அடைய முயற்சிக்க வேண்டும - என்றார்.



# நெல் கொள்வனவுக்காக வவுனியாவில் நிதியுதவி

வடக்கில் காலபோக நெல் கொள்வனவுக்கான சௌபாக்கியா கடன்திட்டம் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வடக்கில் அமைந்துள்ள வவுனியா, நானாட்டான், பூநகரி, தென்மராட்சி கிழக்கு, கரைச்சிதெற்கு, கரைத்துறைப்பற்று, விசுவமடு, வவுனியா வடக்கு ஆகிய 8 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு மொத்தமாக 90 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

நிகழ்வில் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன, ராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, வடமாகாண ஆளுனர் திருமதி பி.எஸ். எம்.சாள்ஸ், வடமாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# கொரோனாவைத் தடுக்க ஒத்துழைப்பு வழங்குங்கள்

## மக்களிடம் கோருகின்றது அரசு

கொழும்பு, பெப். 14

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு பொதுமக்களிடம் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த ஆரம்ப சுகாதார மற்றும் கொவிட் கட்டுப்பாடு இராஜாங்க அமைச்சர் -

பொதுமக்களின் உதவியின்றி இந்த வைரஸைக் கட்டுப்படுத்த முடியாது.

மக்கள் பயணங்களை மட்டுப்படுத்தவும், அதிகளவிலான மக்கள் இருக்கும் இடங்களைத் தவிர்க்கவும், முக்கவசம் அணியவும், ஒரு மீற்றர் சமூக இடைவெளியை பின்பற்றவும்வேண்டும்.

இதேவேளை நாட்டில் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசியை செலுத்தும் நடவடிக்கை தொடங்கப்பட்ட பின்னர், வைரஸை அதிக அளவில் கட்டுப்படுத்த முடியும்.

பி.சி.ஆர். சோதனை முடிவுகளை வெளியிடுவதில் ஏற்படும் சிறிய தாமதங்களும் இந்த அதிகரிப்புக்கு ஒரு காரணம் - என்றார். (அ)

# மத்திய அஞ்சல் பரிவர்த்தனையில் 4 ஊழியர்களுக்கு தொற்று உறுதி

கொழும்பு, பெப். 14

கொழும்பு-மத்திய அஞ்சல் பரிவர்த்தனையில் பணியாற்றும் 4 ஊழியர்களுக்கு கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளது.

அவர்களில் ஒருவர், மத்திய அஞ்சல் பரிவர்த்தனையில் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில் நோயாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், அவருடன் தொடர்பைப் பேணிய 26 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது குறித்து தெரிவித்த அஞ்சல்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன, தொற்றுறுதியானவர்கள் சிகிச்சை மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். (அ)



# நான்கு தசாப்தங்களின் பின்னர் ஓய்வூதியம் பெறும் ஊழியர்கள்

கொழும்பு, பெப். 14

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் தனியார் மயப்படுத்தப்பட்ட புடைவை நிறுவனங்களின் ஊழியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை பிரதமர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, பிரதமர் தலைமையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் ஆரம்பிக்கப்பட்டது. இதில், மூவாயிரத்து 330 ஊழியர்கள் பயன் பெறுகின்றனர்.

1980 மற்றும் 1982 ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தனியார் மயப்படுத்தப்பட்ட புடைவை நிறுவனங்களில் 10 வருடங்களுக்கும் குறைவான சேவைக் காலத்தையுடைய ஊழியர்களுக்கு, அவர்களது வாழ் நாள்முழுவதும்இவ்வாறு மாதாந்த கொடுப்பனவு பெற உரிமையுண்டு.

இந்த மாதாந்தக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைக்கு அமைய குறியீட்டு ரீதியாக, சில ஊழியர்களுக்கு பிரதமரினால் காசோலைகள் வழங்கப்பட்டன.

2020 ஜூலை 15ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்ட முடிவுக்கமைய, இந்த மாதாந்த கொடுப்பனவை வழங்குவதற்குப் பொதுத் திறைசேரியிலிருந்து புடைவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு 95 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது.

அரச சேவையில் ஓய்வூதிய இழப்பாளர்கள் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜே.எம். பிசோமெனிகே, அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் குறித்த விரிவான அறிக்கையை பிரதமரிடம் வழங்கினார்.

இதன்போது, கருத்து தெரிவித்த பிரதமர், தான் தொழில் அமைச்சராக இருந்த காலப் பகுதியிலிருந்து அவதானம் செலுத்திவந்த ஒரு பிரச்னைக்கு இவ்வாறு தீர்வு பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளமை குறித்து மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, புடைவைக்கைத்தொழில்திணைக் களத்தின் பணிப்பாளர் திமுது குலதிலக உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# 2 ஆம் கட்ட தடுப்பூசி 12 வாரங்களின் பின்

## கொவிட் தொற்று தடுப்புக்கான இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு



**கொழும்பு, பெப்.14**

**ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராசெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களுக்கு 12 வாரங்களின் பின்னர் 2 ஆம் கட்ட தடுப்பூசியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

தடுப்பூசியின் முதல் மருந்தை பெற்றுக்கொண்ட 76 வீதமானவர்களுக்கு 12 வாரங்களுக்கு நோயெதிர்ப்பு சக்தி இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக கொவிட் தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்ணாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் முதலாவது தடுப்பூசியை செலுத்தி 8-12 வாரங்களுக்கு பின்னர் அடுத்த தடுப்பூசியை செலுத்த உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ள நிலையில் இது குறித்த இறுதித் தீர்மானத்தை அடுத்த வாரம் மேற்கொள்ளவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் 185,000 க்கும் மேற்பட்ட முன்னணி சுகாதார ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸார் முதல் சுற்று கோவிஷீல்ட் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர் என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்ணாண்டோபுள்ளே கூறினார்.

அத்துடன் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தனியார் சுகாதார தரப்பினருக்கும் தடுப்பூசியை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# இரணைதீவில் பெரும் கடலட்டைப் பண்ணை

## இன்று அங்குரார்ப்பணம்



கிளிநொச்சி, பெப். 14

நவீன தொழில்நுட்பப் பதனிடுதல் பொறிமுறையை உள்ளடக்கிய பெரும் கடலட்டைப் பண்ணை இரணைதீவு பிரதேசத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில், கிளிநொச்சி, இரணைதீவு கடற்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த பண்ணைக்கான ஆரம்ப நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இரணைதீவில் இடம்பெறவுள்ளது. கடற்றொழில் அமைச்சரின் வேண்டுகோளுக்கு அமைய, இரணை தீவை அண்டிய கடற்பிரதேசததில் ஆய்வுகளை மேற்கொண்ட நாரா எனப்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனம், கடலட்டை வளர்ப்புக்கு ஏதுவான கடல்பரப்பினை அடையாளப்படுத்தியது.

இந்த திட்டத்திற்குத் தேவையான முதலீடுகளை மேற்கொள்வதற்கும் உற்பத்தி செய்யப்படும்க டலட்டைகளைக் கொள்வனவு செய்து நவீன தொழில்நுட்ப முறையில் பதனிட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் 45 வருட தொழில் அனுபவத்தைக் கொண்ட தனியார் முதலீட்டு நிறுவனம் முன்வந்தது.

இந்நிலையில், நக்டா எனப்படும் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தனியார் முதலீட்டாரள்கள் இணைந்த பொறிமுறையூடாக அமைக்கத் தீர்மானிக்கப்பட்ட பெரும் கடலட்டைப் பண்ணையின் பயனாளர்கள் அனைவரும் இரணைதீவைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் மத்தியில் இருந்தே தெரிவுசெய்யப்படவேண்டும் என்பது கடற்றொழில் அமைச்சரின் திட்டவட்டமான தீர்மானமாக இருந்தது. இந்நிலையில், முதற்கட்டமாக 83 பயனாளர்கள் தெரிவு செய்யப்பட்டு தலா ஒரு ஏக்கர் என்ற அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கான ஆரம்ப முதலீடுகள் அனைத்தையும் தனியார் நிறுவனம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

இலங்கையிலேயே முதன்முறையாக நவீன தொழில் நுட்பப் பதனிடும் பொறிமுறை உள்ளடக்கப்பட்ட குறித்த கடலட்டைப் பண்ணையின் ஊடாக சுமார் 500 உறுப்பினர்களைக் கொண்ட 83 குடும்பங்கள் நேரடித் தொழில்முனைவோராக் கப்பட்டுள்ளனர். இதனுடாக சுமார் 500 தொழிலாளர்கள் நேரடித் தொழில் வாய்ப் பையும் சுமார் 400 இற்கும் மேற்பட்டவர்கள் மறைமுகமான தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். அத்துடன், இரண்டாம் கட்டத்தில் பயனாளர்களாக இணைந்து கொள்வதற்காக இரணைதீவைச் சேர்ந்த சுமார்135 கடற்றொழிலாளர்கள் முன்வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# புதியவகை தொற்று குறித்து சுகாதார அமைச்சு ஆராய்வு

கொழும்பு, பெப். 14

இலங்கையில் கண்டறியப் பட்ட பிரிட்டனில் பரவிவரும் புதியவகை கொரோனா தொற்று குறித்து சுகாதார அமைச்சு ஆய்வை ஆரம்பித்துள்ளதாக உயர் சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தொற்றுநோயியல் பிரிவுக்கு அறிவுறுத்தியுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

புதிய மாறுபாட்டின் பரவல் வீதம் அதிகமாக காணப்படுவதாக ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

தற்போது குறித்த தொற்று, கொழும்பு, அவிசாவளை, இங்கிரிய, பியகம, வத்தளை, மத்துகம, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் பெறப்பட்ட மாதிரிகளில் கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே பொதுமக்கள் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என சுகாதார அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வடக்கு மாணவர்களுக்கு சிங்களம் கட்டாயமானது

யாழ்ப்பாணம், பெப். 14

வடக்கிலுள்ள மாணவர்களுக்கு பாடசாலைகளில் சிங்கள மொழியை கற்பிப்பது கட்டாயம் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

வடக்கிற்கான பயணத்தை மேற்கொண்டிருந்த கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் யாழ்.மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடியபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



வடக்கு மாணவர்களுக்கு பாடசாலைகளில்சிங்களமொழியை கற்பிப்பது முக்கியமானதாகும். தெற்கில் உள்ள பாடசாலைகளில் தற்போது மிக சாத்தியமானதாக தமிழ் மொழியை கற்பிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று வடக்கு மற்றும் தெற்கில் உள்ள பாடசாலைகளுக்கிடையில் நெருக்கமான நட்புறவுகளை முன்னெடுத்துச் செல்வது முக்கியமானதாகும். சிங்கள மொழியை கற்றுக் கொள்வதில் வடக்கு மாணவர்களிடம் பெரும் ஆவலைக் காண முடிகின்றது.

வடக்கில் ஆசிரியர்கள் பற்றாக்குறை முக்கிய பிரச்சினையாக உள்ளது. அதற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மட்டத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்-என்றார்.

# குருந்தூர் மலைக்கு செல்வதற்கு செய்தியாளர்களுக்கு கட்டுப்பாடு

முல்லைத்தீவு, பெப். 14

தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டு, அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் குருந்தூர் மலைக்கு செல்வதற்கு ஊடகவியலாளர்கள் அனுமதி பெறவேண்டுமென்று, முல்லைத்தீவு மாவட்ட தொல் பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, குருந்தூர்மலையில் காணொளி எடுப்பதற்கு, ஊடகவியலாளர்கள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தி, தொல்பொருள் திணைக்களத்தில் விண்ணப்பித்து, குறிப்பிடும் திகதியில் படம் எடுக்கலாம் என மாவட்ட தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஈழநாடு
Online
சம்பவங்கள்,
செய்திகள்
உடனுக்குடன்
அறிந்துகொள்ள...
www.eelanadu.lk



# மியான்மார், இலங்கை, ஜெனிவா வல்லரசுகளும் புவிசார் அரசியலும்

– கலாநிதி தயான் ஜயதிலக்க

சீனாவின் போஷிப்பை அனுபவிப்பதும் இஸ்லாமிய வெறுப்புவாதத்தைக் கொண்ட போர்க் குணமிக்கதொரு பௌத்த பிக்குகளின் இயக்கத்தை கொண்டதுமான தேரவாத பௌத்த நாடொன்றை இராணுவம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது. அது இலங்கை அல்ல. இன்னும் இது மியன்மாராகவே இருக்கிறது.

ஒரு குறிப்பிடத்தக்க சமச்சீராக, கோத்தாபய ஆட்சியின் மிகவும் மதிப்பிற்குரிய கருத்தியல் குருவும், தேசிய சிந்தனையின் இணை சிற்பியுமான பேராசிரியர் நளின் டி சில்வா மியன்மாருக்கான எமது தூதுவராக உள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை உயர்ஸ்தானிகரின் அறிக்கை இலங்கையில் இராணுவ மயமாக்கல் குறித்து எச்சரித்திருப்பதை மியன்மார் இராணுவம் செல்லுபடியாக்கியுள்ளது. இலங்கையின் பல பரிமாண மற்றும் விரிவான இராணுவ மயமாக்கல் தொடர்பாக பொதுவாக இராணுவ ஆட்சிக்கு ஒரு பாதிவழியில்இலங்கை உள்ளது. ஓய்வுபெற்ற ஜெனரல் தலைமையிலான பாதுகாப்பு அமைச்சிற்குள் பொது நிறுவனங்களை வெற்றிடமாக்குவது, ஏற்கனவே இலங்கையின் நிர்வாகத்தை நடத்துவதற்கு இராணுவத்திற்கு பயிற்சி அளிக்கிறது. இன்றைய இராணுவ மயமாக்கல்ஏற்கனவே ஒரு சாய்வுத்தளமாக அல்லது ஓடு பாதையாகவிருக்கிறது. இது நாளை இராணுவ கட்டுப்பாட்டுக்கான ஆற்றலை கொண்டதாக உள்ளது.

இலங்கை அடுத்த மியன்மார் (அல்லது தாய்லாந்து) ஆக மாறாவிட்டால், எமது அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்கள் அனைவருமே அரசாங்கத்திலோ அல்லது எதிர்க் கட்சியிலோ இருந்தாலும், ஜனநாயகத்திற்காக ஒற்றுமையாக நிற்க வேண்டும், இராணுவ மயமாக்கலுக்கு எதிராக அதனை பின்வாங்கசெய்ய வேண்டும்.

நியூயோர்க்கில் உள்ள எங்கள் ஆள் வெளிப்படையாக தோல்வியுற்றார், ஐ.நா. பொதுச் சபையில் ஐ.நா செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டரெஸுடன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் மனித உரிமைகள் பேரவை உயர் ஸ்தானிகர் அலுவலகம் 'பயங்கரவாதிகளின் செல்வாக்கு' மற்றும் 'ஆட்சி மாற்றம் நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருந்தது' என்றும் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது.

**ஆணையாளரின் அக்கறை**

'சிவில் அரசாங்க செயல்பாடுகளை இராணுவ மயமாக்குவது ஆழப்படுத்துதல் மற்றும் முடுக்கம்' என்பது தெளிவாக உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அவரது தீவிர அக்கறை இன-மத மேலாதிக்கத்துடன் இராணுவ மயமாக்கலுடன் பிணைக்கப்பட்ட தன்மை பற்றியது என்று தெரிகிறது.

தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வு காண13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு அல்லது தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்று அரசியல் தீர்வு அல்லது உண்மையில் அரசியல் உரையாடலின் எந்தவொரு செயல்முறையும் அவர்களுடன் மேற்கொள்வது என்பனவற்றை தவிர்த்து இந்த பெப்ரவரி-மார்ச் மாதங்களில் ஜெனிவாவிற்கு செல்வதன் மூலம் இலங்கை அரசாங்கம் இந்த குற்றச்சாட்டை உறுதிப்படுத்துகிறது.

ஜெனிவாவில் அதிகளவுக்கு பரிசீலிக்கப்படும் விவகாரமாக இலங்கை இராணுவ மயமாக்கல் தொடர்பான உயர் ஸ்தானிகரின் விமர்சனத்திற்கு எதிராக தற்போதைய இலங்கை ஆட்சியின் கடுமையான பேச்சு, மிச்சேல் பச்லெட் (மற்றும் அன்ரனியோ குட்டரெஸ்) அங்கீகரிக்கும் நிகழ்வு மற்றும் நெறிமுறைகளின் இருப்பை உறுதிப்படுத்துகிறது: 'தேசிய பாதுகாப்பு அரசு', ஒரு மோசமான கட்டமைப்புதன்மை லத்தீன் அமெரிக்க துணைக் கண்டத்தையும் ஒரு ஐரோப்பிய தீபகற்பத்தையும் பல தசாப்தங்களாக கொண்டிருக்கிறது.

**பிடன் நிர்வாகத்தின் நியமனங்கள்**

பிடன் நிர்வாகத்தின் அறிவிப்புகள் மற்றும் நியமனங்கள் விடயங்களை தெளிவுபடுத்துகின்றன:

(அ) சீனா முக்கிய உலகளாவிய சவாலாகவும், இந்தோ-பசிபிக் போட்டி யின் முக்கிய அரங்காகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது - இது ட்ரம்ப் ஆண்டுகளின் தொடர்ச்சியாகும்.

(ஆ) மண்டலம் மற்றும் சீனாவின் கொள்கையை கையாள உயர்மட்ட கொள்கைக்கரங்கள்நியமிக்கப்பட்டுள்ளன - இது புதியது, ஏனென்றால் ட்ரம்பிற்கு சீரற்ற முதல் ஏழை வரை பணியாளர் தேர்வுகள் இருந்தன.

(இ) சீனாவின் போட்டி மற்றும் கட்டுப்பாடு 'இலகுவான ' ட்ரம்ப் கொள்கை முன்னுதாரணத்தைப் போலல்லாமல் புத்திசாலித்தனமாகவும் பல பரிமாணம் கொண்டதாகவும் இருக்கும்.

(ஈ) திட்டம், மதிப்பு மற்றும் முறைமையென ஜனநாயகம் பிடன்-ஹாரிஸ் நிர்வாகத்தால் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது, முதன்மையாக சமகால அமெரிக்க அரசியல் போராட்டங்களால் தூண்டப்பட்ட நேர்மையான நம்பிக்கையின் காரணமாகவும், அது சீனாவுடனான போட்டியின் விளிம்பில் இருப்பதால், ஜனநாயகம் மற்றும் திறந்த சமுதாயங்கள் என்ற கருத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி , அதன் சொந்த ஆட்சி முறையை ஊக்குவிப்பதாக காணப்படுகிறது.சீனாவுடனான சமன்பாட்டின் விதிமுறைகளைப் பொறுத்தவரை, பிடன் நிர்வாகத்திற்கும், க பிடல் ஹில்லை கட்டுப்படுத்தும் ஜனநாயகக் கட்சியினருக்கும் இலங்கை ஒரு சோதனைக்கான விடயமாக இருக்கும். இந்தோ-பசிபிக் பிராந்தியமானது , அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நீடித்த ஜனநாயகமாக இருப்பதை உறுதி செய்வதில் பிடன் நிர்வாகம் பாரியதொரு மூலோபாய ஆர்வத்தைக் கொண்டுள்ளது.

மைக் பொம்பியோவின் அவதானிப்பை பற்றிய அமெரிக்க வெளியுறவுத் துறை கொள்கை திட்டமிடல் அறிக்கை, சீனாவின் செயற்பாட்டு கோட்பாட்டுக்கு கம்யூனிசம் ஒரு முக்கிய இயக்கி என்ற அதன் வற்புறுத்தலால்திசைதிருப்பப்பட்டது. உண்மையில், 'சீனாவின் செயற்பாட்டுக்கான ஆதாரங்கள்'வலுவான பூகோள -வரலாற்று-நாகரிக கூறுகள் மற்றும் கலாநிதி கிஸ்ஸிங்கரின் 'சீனா பற்றி சிறப்பாக அடையாளம் காணப்பட்ட இயக்கிகளாகவுள்ளன. கோட்டாபய ஆட்சியின் சீனா மீதான ஈர்ப்புக்கு நிச்சயமாக மீதமாகவுள்ள கம்யூனிசத்துடன் எந்த தொடர்பும்இல்லை, கம்யூனிசம் மிகவும் பகுத்தறிவு மற்றும் கருத்தியல் ரீதியானதாகும்.ஈர்ப்புகள் சீனாவின் பலம் மற்றும் செல்வம், ஒரு கட்சி அரசு மற்றும் சமூக மேலாண்மை / கட்டுப்பாட்டின் தொழில்நுட்பங்கள் என்பனவாகும்.

போட்டியின் நடு அரங்கில் இந்தோ-பசிபிக்கில், உலகின்மிக சக்திவாய்ந்த ஜனநாயகத்துடன் உலகின் மிகசனத்தொகை கூடிய ஜனநாயகம், பங்காளியாகவுள்ளது, மூலோபாய ரீதியாக நிலைநிறுத்தப்பட்ட ஒரு தீவின் முறையானசாய்வை அவர்களின் முக்கிய போட்டியாளரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஒரு போட்டிதன்மையான ஆளுகையை நோக்கியதாக அறிந்து கொள்ளலாம்.

**சீனாவின் எழுச்சி அச்சுறுத்தலா?**

சீனாவின் எழுச்சி இலங்கைக்கு அல்லது இலங்கையின் ஜனநாயகத்திற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. அச்சுறுத்தல் ஒரு குறிப்பிட்ட, உறுதியான இணைப்பிலிருந்து வருகிறது. இரண்டு 'விலகல்களின்' கலவையாகும்:

> **“ ஆங் சான் சூகியையும் ஏனைய சிரேஷ்ட அரசாங்கத் தலைவர்களை யும் தடுத்து வைத்ததை தொடர்ந்து மியான்மரின் இராணுவம் சதிப் புரட்சியின் மூலம் நாட்டின் ஆட்சிக் கட்டுப்பாட்டை எடுத்துக் கொண்டதுடன், அவசரகால நிலையையும் பிரகடனப் படுத்தியது. ”**

(அ) இலங்கையில் ஒரு முரண்பாடான, அசாதாரணமான, இராணுவமயமாக்கலின் தருணம், இது நீண்டகால வலுவான சிவில் ஜனநாயகத்திலிருந்து புறப்படுவதும்,

(ஆ) சீனாவின் ஒரு சாகசவாதம், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் சீனாவின் கடைசி காங்கிரசில் ஏற்பட்ட மாற்றங்களில் இருந்து வருகிறது என்ற ஜனாதிபதி பில் கிளிண்டனின் கருத்து.

இலங்கை ஆட்சி சீனாவின் மாதிரியாக மாற்றுவது சீனாவின் தவறு அல்ல. சீனாவின் எந்தவொரு தீவிரமான சீடனுக்கும் அது தெரியும். பிடன்-ஹாரிஸ் நிர்வாகத்தின் உள்வரும் 'கச்சிதமான' உந்துகை மற்றும் விருப்பம் மற்றும் புத்தி என்பனவற்றின் தவிர்க்கமுடியாத பரிசீலனைகளை கருத்தில்கொண்டு, சீனகம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான சீனா இறுதியில் மறுபரிசீலனை செய்து அதன் யதார்த்தமான பாங்கு மற்றும் தன்மைக்கு மாற்றியமைக்கும். தவறாகப் புரிதல்.தங்களது சீன சகாக்களுடன்நெருங்கிய நட்பை அனுபவித்த தலைவர்கள் உட்பட அடுத்தடுத்த இலங்கை அரசாங்கங்கள், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச செல்வாக்கை ஒருபோதும் அனுமதிக்கவில்லை என்பது உண்மைதான்.

சீனா அதன் பங்கிற்கு, தனது அரசாங்க மற்றும் அரசு உறவுகளை அதன் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச அரசியலில் இருந்து விலத்திவைத்திருக்கிறது. ட்ரம்பிற்கும் ஷிக்கும் இடையில் சீனா மட்டுமல்லாமல் பிடன்-ஹாரிஸ் பிரசாரமும் அதன் சிந்தனையாளர்களும் ட்ரம்ப்பின் ஜனாதிபதி பதவியை ஒரு உலகளாவிய சர்வாதிகார தீவிர வலதுசாரிகளின் எழுச்சியின் ஒரு பகுதியாக வெளிச்சம் போட்டுக் காட்டி வருகின்றனர்.

அரச வடிவங்களின் பன்முகத்தன்மை அங்கீகரிக்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும், ஆனால் அதுவும் சுதந்திரத்தின் உலகளாவிய தன்மை மற்றும் மீறிய தன்மை, சுதந்திரம் தேசபக்திமற்றும் எதேச்சதிகாரர்கள், சர்வாதிகாரம் மற்றும் சர்வாதிகாரிகள், கொடுங்கோன்மை மற்றும் கொடுங்கோலர்களிடமிருந்து நாடுகள், சமூகங்கள் மற்றும் தனிநபர்களின் சுதந்திரம் என்பனவும் அடையாளங் காணப்படவேண்டும்.

பழைய கம்யூனிஸ்ட் சூத்திரம் சரியானது: மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கிடையில் சமாதான சகவாழ்வு என்பது பூகோள அரசியல் மற்றும் கருத்தியல் போராட்டத்துடன் குழப்பமடையக்கூடாது.

சீனாவிற்கும் ஆளும் கட்சிக்கும் உலகளாவிய ஜனநாய கத்திற்கும் இடையிலான கருத்துக்கள், மதிப்புகள், விதிமுறைகள் மற்றும் முன்னு தாரணங்களின் போராட்டமும் இணைந் திருக்கும் அதே வேளையில், அமெரிக்கா தனக்கும் சீன அரசாங்கத்துக்கும் அரசுக்கும் இடையிலான அரசுகளுக்கு இடையிலான சமன்பாட்டில் இயல்புநிலையை மீட்டெடுக்க முயற்சிக்க வேண்டும். 'சமா தானம் பிரிக்க முடியாதது' என்பது 1930களில் லிட்வினோவ் அறிவித்திருந்த பிர பலகூற்று. ஜனநாயகமும் அப்படித்தான்.

- பினான்சியல் டைம்ஸ்

ஈழநாடு



# குருந்தூர் மலை சிவாலயம் வரலாறும், சான்றுகளும்



எல்லப்பர் மருதங்குளம் எண்கோண இலிங்கம்

**என்.கே.எஸ். திருச்செல்வம்**
வரலாற்று ஆய்வாளர்

**தாரா லிங்கம் மற்றும் யூப்ப ஸ்தம்பம் பற்றிய விபரங்கள்**

தாரா லிங்கம் என்பதும், யூப்ப ஸ்தம்பம் என்பதும் தமிழர்கள் பலருக்கு பரீட்சய மான சொற்கள் அல்ல. பலருக்கு இது பற்றி தெரிய வாய்ப்பில்லை. எனவே இவை பற்றிய ஓர் விளக்கத்தை இங்கே தருவது பொருத்தமாக இருக்கும்.

பொதுவாகவே பண்டையகால சிவலிங்கங்கள் மூன்று பாகங்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். தளத்திற்குள் இருக்கும் அடிப் பகுதி பிரம்ம பாகம் எனவும், ஆவுடையாருக்குள் மறைந்திருக்கும் நடுப் பகுதி விஷ்ணு பாகம் எனவும், மேலே நம் கண்களுக்குத் தெரியும் உச்சிப் பகுதி உருத்திர பாகம் எனவும் அழைக்கப்படும்.

தாரா லிங்கங்கள் பற்றி பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் "இந்து விக்கிரகக் கலை மரபில் சிவவடிவங்கள்" எனும் தனது நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"சிவலிங்கங்களை நான்கு பிரதான வகைகளாகப் பிரிக்கலாம். அவை சுயம்பு, ஆர்ஷம், காணவம், மானுஷம் என்பனவாகும். இவற்றில் மானுஷம் என்பது மனிதர்களால் ஸ்தாபிக்கப்படுபவையாகும். இவற்றில் மொத்தமாக எட்டு வகையான லிங்கங்கள் உள்ளன. இவை சமகண்ட லிங்கம், வர்த்தமான லிங்கம், சைவாதிக லிங்கம், ஸ்வஸ்திக லிங்கம், சர்வதோபத்ர லிங்கம், சார்வதேசிக லிங்கம், திரை ராசிக லிங்கம், தாரா லிங்கம் என்பனவாகும்."

"தாரா லிங்கம் மூன்று வகையில் அமையும். முதல் வகை அடி முதல் நுனிவரை சதுரமாக அமைவதாகும். சமகண்ட லிங்கத்தில் பிரம்ம பாகம் மட்டும் சதுரமாகவும், மற்றவை எட்டுப்பட்டை வடிவிலும் அமைவது இரண்டாவது வகை. சமகண்ட லிங்கத்தின் பிரம்ம பாகத்தை சதுரமாகவும், விஷ்ணு பாகத்தை எட்டுப் பட்டமாகவும், உருத்திர பாகத்தை பதினாறு பட்டமாகவும் அமைத்தல் மூன்றாவது வகை. தாரா லிங்கத்தில் கீற்றுக்கள் போன்ற தாரைகள் செதுக்கப்படும்."

மேலும் இந்த லிங்கங்களின் உயரம், அகலம் மற்றும் அளவுகள் பற்றி பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் அந்நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"இவற்றின் மொத்த உயரத்தை மூன்றாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் அமைப்பார்கள். அதாவது மொத்தமாக உயரம் 12 அடி என்றால் 4+4+4 என்ற வகையில் பிரிக்கப்படும். இந்த அளவு 3+4+5 எனவும் அமையும். மேலும் 4+4+5 என அமையும்போது உயரம் 13 அடியாக அமையும். இதில் 4 அடி உருத்திர பாகமாகவும், 4 அடி விஷ்ணு பாகமாகவும், 4 அடி பிரம்ம பாகமாகவும் அமையும்." இவ்வாறு பேராசிரியர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியரின் இக்கூற்றின்படி இதில் உருத்திர பாகமாகவுள்ள 4 அடி லிங்கம் மட்டுமே நம் கண்களுக்குத் தெரியும். எனவே நாம் பார்க்கும் 4 அடி சிவலிங்கத்தின் மொத்த உயரம் 12 அடியாகும்.

அடுத்தது யூப்ப ஸ்தம்பம் அல்லது யூப்ப கல என்றால் என்ன என்பது பற்றிய விளக்கத்தைப் பார்க்கலாம்.

இது பௌத்த தூபியின் உச்சியில் பண்டைய காலத்தில் வைக்கப் பட்டிருந்த ஒரு கற்தூணாகும். இது எட்டு திசைகளுக்கும் பாதுகாப்பாக விளங்கும் தெய்வங்களுக்காக வைக்கப்பட்டதாகவும், பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு தூபியின் உச்சியில் பொருத்தப்பட்டவை எனவும், அதன் பின்பு தூபியின் உச்சியில் யூப்ப ஷ்தம்பங்களுக்குப் பதிலாக "தேவதா கொட்டுவ" எனப்படும் சதுர வடிவான பகுதி அமைக்கப் பட்டதாகவும் குறிப்புகள் கூறுகின்றன.

யூப்ப ஸ்தம்பங்கள் பற்றி "புராண அபய கிரி விஹாரய" எனும் நூலில் பேராசிரியர் டி.ஜி.குலதுங்க பின்வருமாறு கூறியுள் ளார்.

யூப்ப ஸ்தம்பம் என்பது பண்டைய தூபிகள் எல்லாவற்றிலும் கட்டாயமாக அமைக்கப்பட வேண்டிய ஓர் பாகம் அல்ல. சாஞ்சி தூபியில் யூப்ப ஸ்த ம்பம் இருந்தமைக்கான ஆதாரங்கள் இல்லை. சேருவில தூபி அமைத் தமை தொடர்பாக தாது வம்சம் கூறும் விபரங்களில் யூப்ப ஸ்தம்பம் பற்றிக் குறிப் பிடப்படவில்லை. ருவன் வலிசாய தூபியில் யூப்ப ஸ்தம்பம் இருந்தது பற்றி குறிப்பிடப்படவில்லை என பேராசிரியர் தனது நூலில் கூறியுள்ளார்.

அனுராதபுரத்தில் உள்ள மிகப்பெரிய பண்டைய தூபிகளான ஜேதவனாராம, ருவன் வலிசாய ஆகியவற்றில் யூப்ப ஸ்தம்பங்கள் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

தென்னிந்தியப் பிராந்தி யத்தில் பல்ல வர் காலத்தின் நடுப்பகுதியான பொ.ஆ. 6ஆம் நூற்றாண்டின் பின்பே கல்லில் சிற்பங்கள் மற்றும் நேர்த்தியான தூண்கள் அமைக்கப் பட்டன. ஆனால் யூப்ப ஸ்தம் பங்கள் பொ.ஆ. 5ஆம் நூற் றாண்டிற்கு பின்பு பயன்படுத் தப் படவில்லை.

இக்காலப்பகுதிக்கு முன்பு இலங்கையில் இருந்த தூபிக்களில் காணப் பட்ட யூப்ப ஸ்தம்பங்கள் எல்லாம் கரடு முரடான வடிவமைப்பைக் கொண்டவையாகும். மிகுந்தலையில் இப்படியான கரடு முரடான யூப்ப ஸ்தம்பங்கள் காணப்படுகின்றன.

யூப்ப ஸ்தம்பத்தை தூபியின் உச்சியில் பொருத்தும் வழக்கம் ஒளிந்து சுமார் 100 வருடங்களின் பின்பு பல்லவர் காலத்தி லேயே நேர்த்தியாக தூண்களை அமைக் கும் மரபு உருவானது. எனவே 5 ஆம் நூற்றாண்டுக்கு பின்பு நேர்த்தியாக எட்டுப் பட்டை வடிவில் உருவாக்கப் பட்டவை யூப்ப ஸ்தம்பங்கள் அல்ல. அவை தாரா லிங்கங்கள். அது போன்ற ஒரு நேர்த்தி யான தாரா லிங்கமே குருந்தூர் மலையில் தற் போது கிடைத்துள்ளது.

குருந்தூர் மலையில் வெளிப் பட்ட பல்லவர் கால தாராலிங்கம் போன்று தமிழகத்தில் பல இடங்களில் தாரா லிங்கங்கள் காணப்படுகின்றன. பல்லவர்களின் தலைநகரமான காஞ்சிபுரத்தில் உள்ள கைலாச நாதர் கோயிலில் 8 பட்டை மற்றும் 16 பட்டைகள் கொண்ட இரண்டு லிங்கங்களும், ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் ஒரு லிங்கமும் உள்ளன. பல்லவரின் துறைமுகப் பட்டினமான மாமல்லபுரத்தில் புலிக்குகை அருகில் இரண்டு தாரா லிங்கங் கள் காணப்படுகின்றன.

இவற்றைத் தவிர திருவதிகை யவீரட்டானேஸ்வரர் கோயிலில் 8 பட்டை தாரா லிங்கமும், கூந்தலூர் முருகன் கோயிலில் 16 பட்டை தாரா லிங்கமும், தென் பொன்பரப்பி சொர்ணபுரீஸ்வரர் கோயிலில் 16 பட்டை தாரா லிங்கமும், சித்தாத்தூர் செண்பகவல்லி பெருங்கருணை சிவன் கோயிலில் ஒரு தாரா லிங்கமும், களத்தூர் கிளார் அகத்தீஸ்வரர் கோயிலில் 16 பட்டைகளிலும், தென்மங்கலம் சீதப்பட்டீஸ்வரர் கோயிலிலும், திருக்காட்டுப்பள்ளியில் 12 பட்டைகளிலும், திருப்பட்டூரில் 12 பட்டைகளிலும், திருநாவலூரில் 8 பட்டைகளிலும், மேலும் பல இடங்களிலும் இது போன்ற தாரா லிங்கங்கள் காணப்படுகின்றன. இலங்கையிலும் அனுராதபுரம், கன்னியா, இரணை இலுப்பக்குளம், கற்சிலைமடு, மருதங்குளம் உட்பட பல இடங்களில் தாரா லிங்கங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் வன்னிப் பகுதியில் உள்ள சிவலிங்கள் பற்றி பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்களின் குறிப்பு.

அருணா செல்லத்துரை அவர்கள் எழுதிய "அடங்காப்பற்று வன்னி வரலாறு" எனும் நூலில், வன்னிப் பகுதியில் அவர் கண்டறிந்த பல சிவலிங்கங்களில் இரணை இலுப்பக்குளம், கற்சிலைமடு , மருதங்குளம் ஆகிய மூன்று இடங்களில் காணப்படும் லிங்கங்கள் குருந்தூர் மலையில் தற்போது கிடைத்த லிங்கத்தை ஒத்த எட்டுப்பட்டை தாரா லிங்கங்களாகும். இவற்றின் படங்களும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை சிவ லிங்கங்கள் தான் என இந்நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள பேராசிரியர் எஸ்.பத்மநாதன் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்.

(பக்கம். xix, 78, 79, 82)

குருந்தூர் மலையில் கிடைத்த சின்னம் பற்றி இராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவன தலைவரின் கூற்று.

தமிழகத்தில் இராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் திரு. ராஜகுரு வேலுசாமி அவர்களுக்கு குருந்தூர் மலையில் கிடைத்த சிவலிங்கத்தின் புகைப்படத்தை அனுப்பி, அதில் உள்ளது என்ன எனக் கேட்டேன். அவர் அதைப் பார்த்து விட்டு இது "எட்டுப் பட்டை அஷ்டலிங்கம்" எனத் தெரிவித்தார். எனவே மேற்குறிப்பிட்டுள்ள ஆதாரங்கள், மற்றும் குறிப்புகளை வைத்துப் பார்க்கும் பொழுது குருந்தனூர் மலையில் திருக்கேதீஸ்வரத் துக்கு நிகரான பெரிய சிவாலயம் பண்டைய காலத்தில் அமைந்திருந்தது என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

(முற்றும்)



கற்சிலைமடுக் காட்டில் சிறிய சிவலிங்கம்

# நான் போர்க்குற்றவாளி இல்லை நாட்டுக்காக சேவை செய்தேன்

## என்கிறார் கமால் குணரத்ன



**கொழும்பு,பெப்.14**
**நான் போர்க்குற்றவாளி இல்லை என்றும் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் தனது சேவையையே செய்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.**

மேலும் தமது இராணுவம் காட்டில் பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போரிட்ட காரணத் தால்தான் அனைவரும் இன்று சுதந்திரமாக சுற்றித்திரிவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகப் பயணத்தடை விதிப்பது குறித்த, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிவிப்பு தொடர்பில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விஷேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்தோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முட்டாள்த்தனமான அறிக்கையை வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக எந்த அடிப்படையில் அவர்கள் அத்தகைய முடிவுகளுக்கு வந்தார்கள் என்பது தனக்குத் தெரியவில்லை என்றும்,

போலித் தகவல்களின் அடிப்படையில் தங்களுக்கு எதிராக அறிக்கைகளை சமர்ப்பிக்காமல் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என தான் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையிடம் கேட்டுக்கொள்வதாகவும் கூறினார்.

இதேவேளை மனித உரிமைகள் தொடர்பில் பேசுபவர்கள், போர் இடம்பெற்றபோது அந்தக் கிராமங்களில் கண்டெடுக்கப்பட்ட உடல்களின் எண்ணிக்கையைப் பற்றியோ, சிறுவர் போராளிகளை இணைத்தமை மற்றும் விடுதலைப் புலிகளின் குற்றங்களைப் பற்றியோ பேசுவதில்லை என்றும் சாடினார்.

மேலும் தான் போர்க்குற்றவாளி இல்லை என்பதால், கைது செய்யப்பட்டாலும், அவற்றை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் யு.என்.எச்.சி.ஆர். அறிக்கையிலிருந்து தங்கள் பெயர்களை நீக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் கமால் குணரத்ன குறிப்பிட்டார். (எ)



## வியாபாரிகள் நால்வருக்கு கொரோனா; அச்சுவேலி சந்தை வெறிச்சோடியது

யாழ்ப்பாணம்,பெப்.14

வியாபாரிகள் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அச்சுவேலி சந்தை வெறிச்சோடிக் காணப்பட்டது.

சந்தை வியாபாரிகள் நால்வருக்கு கொரோனா தொற்று நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்ட நிலையில் இந்த வியாபாரிகளுடன் தொடர்புடையவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்த நான்கு வியாபாரிகளும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் சந்தையில் உள்ள கட்டடத் தொகுதியில் ஒரே வரிசையில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் இவர்களுடன் நேரடியாகத் தொடர்புடையவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதோடு அவர்களோடு நேரடியாகத் தொடர்புபட்டவர்கள் தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## மேலும் 615 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு,பெப்.14

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலால் வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த மேலும் 615 பேர் கட்டுநாயக்கா - பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலத்தில் 13 விமானங்கள் மூலம் இவர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்களில் கட்டாரிலிருந்து 173 பேரும், டுபாயிலிருந்து 135 பேரும், அபுதாபியிலிருந்து 75 பேரும், மலேசியாவிலிருந்து 65 பேரும், சிங்கப்பூரிலிருந்து 57 பேரும் அடங்குகின்றனர்.

இவர்கள் அனைவரும், முப்படையினரால் நடத்திச்செல்லப்படும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்தக் காலப்பகுதியில் 431 இலங்கையர்கள், பல்வேறு தேவைகளின் நிமித்தம் 9 விமானங்கள் மூலம் வெளிநாடுகளுக்குப் பயணித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## சாணக்கியன், ஜனா உட்பட 7 பேருக்கு அழைப்பாணை

கல்முனை,பெப்.14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா) த.கலையரசன் உள்ளிட்ட ஏழு பேரை ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி முன்னிலையாகுமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றால் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்து கொள்வார்கள் எனக்கூறி கல்முனை பொலிஸ் நிலையத்தால் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 29 பேருக்கு எதிராகத் தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது.

இருப்பினும் பேரணி இடம்பெற்றதுடன் நீதிமன்றத் தடை உத்தரவு பெறப்பட்டவர்கள் எனப் பெயரிடப்பட்டவர்கள் சிலர் தடை உத்தரவை மீறி கலந்து கொண்டதாகக் குற்றம்சாட்டி மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏழு பேருக்கு எதிராக கல்முனை நீதிவான் நீதி மன்றில் வழக்கொன்று, கல்முனை பொலிஸாரால் கடந்த 5.02.2021 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் இடம்பெற்றதுடன் நீதிமன்றத் தடை உத்தரவை மீறியதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், த.கலையரசன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், சீ.யோகேஸ்வரன், மாணவர் மீட்புப் பேரவை தலைவர் செ.கணேசானந்தன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளர் அ.நிதான்சன் ஆகியோருக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ)



## வத்தளையில் தீ விபத்து!

வத்தளை,பெப்.14

வத்தளை பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் நேற்றுக் காலை தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பொதுமக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)




### மனித உரிமைகள் தொடர்பான

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினராக முன்னாள் யாழ்.முதல்வர் யோகேஸ்வரி

கொழும்பு,பெப்.14

மனித உரிமைகள்மீறல்தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரும், யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வருமான திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அதிவிஷேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.



எம்.டி. நவாஸ், ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர் சந்திர பெர்ணாந்து மற்றும் ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் நிமால் அபேசிறி ஆகிய மூவர் கொண்டமைந்த மனித உரிமைகள் மீறல் தொடர்பானஜனாதிபதி ஆணைக்குழு அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

இந்நிலையில் அந்த ஆணைக்குழுவில் இலங்கையின் பன்மைத்துவம் மற்றும் பால்நிலை சமத்துவத்தை பிரதிபலிக்க வேண்டியதைக் கவனத்தில் கொண்டு யோகேஸ்வரி பற்குணராஜாவை நியமிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

## அரசை விட்டு வெளியேற யாருக்கும் சக்தி இல்லை வசந்த சாடல்

கொழும்பு,பெப்.14

ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் எத்தனை சிக்கல்கள் வந்தாலும், எந்தவொரு தரப்பினருக்கும் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதற்கான சக்தி இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் வசந்த சமரசிங்க சாடியுள்ளார்.

நாட்டை அழிவுப்பாதையில் தள்ளிவிட்டு பொதுஜன பெரமுனவை பாதுகாக்கும் முயற்சி நடந்தால், அது அரசியல் அறிவு இல்லாத கட்சிகளின் முட்டாள்த்தனமான செயல் என்றும்,

பொதுக்கூட்டணியில் உள்ள ஏனைய கட்சிகளின் தலைவர்கள் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் சில உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் எந்த அரசியல் அறிவும் இல்லாமல் கூறப்பட்டவை எனவும் அமைச்சர் உதய கம்மன் பில குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் கொழும் பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கேள்வியெழுப்பிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# ஏனைய இனத்தவரின் உரிமைகளை முடக்குவது தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் நோக்கமல்ல

## இராஜாங்க அமைச்சர் விதுர விளக்கம்



**கொழும்பு,பெப்.14**

**நாட்டிலுள்ள ஏனைய இனத்தவர்களின் உரிமைகளை முடக்குவது தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் நோக்கமல்ல என தேசிய மரபுரிமைகள், கலை கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்படும் அகழ்வாராய்ச்சி பணிகள் தொடர்பில் அரசியல்வாதிகள் சிலர், இனவாதம் மற்றும் மதவாதம் ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

அதில் எந்ததொரு உண்மையும் இல்லை. நாட்டின் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் தொல்பொருள் அகழ்வராய்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும் அனைத்து இன மக்களின் மரபுரிமைகளும் அனைத்துப் பகுதிகளிலும் மறைந்துள்ளன. அவற்றைப் பாதுகாப்பதே தேசிய மரபுரிமைகள் அமைச்சின் நோக்கமாகும்.

ஆகவே அரசியல் நோக்கங்களைக் கொண்டு தொல்பொருள் அகழ்வாராய்ச்சிக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை அரசியல்வாதிகள் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

நாட்டில் பல்லின மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஒரு இனத்தின் மதம் மற்றும் கலை கலாசார மரபுரிமைகளை முடக்குவது தொல்பொருள் அகழ்வராய்ச்சியின் நோக்கமல்ல.

குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு அடிபணிந்து தொல்பொருள் அகழ்வாராய்ச்சிப் பணிகளை இடைநிறுத்தப் போவதில்லை.

வடக்கில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்கு எதிராக ஒரு தரப்பினர் நீதிமன்றம் செல்வதாகக் குறிப்பிட்டுள்ளனர். அனைத்து சவால்களையும் சட்டத்தின் ஊடாக எம்மால் வெற்றி கொள்ள முடியும்"- என்றார். (எ)






# ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,பெப்.14

ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியுடன் பணியாற்றிய ஊடகவியலாளர்கள், அவரது நண்பர்கள் மற்றும் யாழ்.ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட முல்லைத்தீவு தேவிபுரத்தில் இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தி உயிரிழந்தார். (எ)

# லொக்காவின் தாய், சகோதரியின் டி.என்.ஏ.மாதிரிகள் இந்தியாவுக்கு



கொழும்பு,பெப்.14

அங்கொட லொக்காவின் தாய் மற்றும் சகோதரியின் உயிரியல் மரபணு மாதிரிகள் (டி.என்.ஏ) இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உயிரிழந்தார் என நம்பப்படும் மத்துமகே லசந்த சந்தன பெரேரா எனும் அங்கொட லொக்காவின் தாய் மற்றும் சகோதரியை இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி உயிரியல் மரபணு மாதிரிகள் ( டி.என்.ஏ) பரிசோதனைக்காக இரத்த மாதிரி பெற்றுக் கொள்ளப்பட்டன- என்றார். (எ)

# பாகிஸ்தான் பிரதமரையும் அரசு ஏமாற்றிவிட்டது

## எதிர்க்கட்சி கடும் சாடல்



கொழும்பு,பெப்.14

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிப்பதாகக் கூறி அரசாங்கம் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உள்ளிட்ட அரச தலைவர்களையும் ஏமாற்றியுள்ளதா? என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா கேள்வியெழுப்பியுள்ளார்.

சர்வதேச அரங்கில் ஒரு விடயத்தையும், உள்நாட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் மற்றொரு விடயத்தையும் கூறுவதன் மூலம் இவ்விரு தரப்பினரையுமே ஏமாற்ற முடியும் என எண்ணுகின்றனர். அவ்வாறு யாரும் ஏமாற மாட்டார்கள். இவ்வாறான செயல்பாடுகள் நாட்டுக்கே பாதகமானதாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை இன்னும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பில் நாம் சபாநாயகரிடமும் விஷேட கோரிக்கையை முன்வைத்துள்ளோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுக்கத் தவறியவர்களைப் போலவே, இதன் பின்னணியில் உள்ளவர்களும், திட்டமிட்டவர்களும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 69 இலட்சம் மக்களை ஏமாற்றுவதற்கு இதுவொரு சிறந்த காரணியாக அமைந்துள்ளது. இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியமை கொரோனா சடலங்களை தகனம் செய்தல் அல்லது அடக்கம் செய்தல் விவகாரத்தில் தெளிவாகியுள்ளது. சிங்கள பௌத்த வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கு ஒரு விடயத்தையும், சிறுபான்மை மக்களை ஏமாற்றுவதற்கு இன்னொரு விடயத்தையும் அரசாங்கம் கூறிக் கொண்டிருக்கிறது- என்றார். (எ)

# மரண அறிவித்தல்

## செல்வி சுந்தரம்பிள்ளை மகேஸ்வரி



யாழ்ப்பாணம் உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுந்தரம்பிள்ளை மகேஸ்வரி அவர்கள் (12.02.2021) வெள்ளிக்கிழமை அன்று காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் சுந்தரம்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் அமரர் நாகலிங்கம் BOC, மற்றும் திருமதி ஈஸ்வரி, அமரர் சற்குணேஸ்வரி மற்றும் பஞ்சலிங்கம் T.K.(MD) அவர்களின் அன்புச் சகோதரி யும், சாவித்திரி அமரர் கணேசமூர்த்தி, திருச்செல்வம் (ஆசிரியர்), புஸ்ப்பவதி ஆகியோரின் மைத்துனியும், வரதனின் மாமியும், ஸ்ரீ விக்னேஸ்வரன், திருமகள், கலைமகள், சிவகாமி, ரேவதி ஆகியோரின் அன்பு சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரச வீதி,**
**உரும்பிராய் கிழக்கு.**

**தகவல்: பஞ்சலிங்கம்**
**0212232010**

# உலக நாடுகளுக்கு 2.29 கோடி தடுப்பூசி வழங்கிய இந்தியா!

புதுடில்லி, பெப். 14

இந்தியா சர்வதேச நாடுகள் பலவற்றுக்கும் இதுவரை 2.29 கோடி கொரோனா தடுப்பு மருந்துகளை வழங்கியுள்ளது என மத்திய வெளிவிவ கார அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

இதுபற்றி அமைச்சக செய்தி தொடர்பு அதிகாரி அனுராக் ஸ்ரீவஸ்தவா கூறும்பொழுது, இதுவரை மொத்தம் 2.29 கோடி கொரோனா தடுப்பு மருந்துகளை சர்வதேச சமூகத்திற்கு நாம் வழங்கியுள்ளோம்.

இவற்றில் 64.7 லட்சம் மருந்துகள் மானிய அடிப்படையிலும், 165 லட்சம் மருந்துகள் வர்த்தக அடிப்படையிலும் வழங்கப்பட்டு உள்ளன என கூறியுள்ளார்.

எதிர்வரும் நாட்களில் ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவு நாடுகளுக்கும் கொரோனா தடுப்பு மருந்துகள் வழங்கப்படக் கூடும் என அவர் கூறியுள்ளார். உள்நாட்டு உற் பத்தி மற்றும் தேசிய தடுப்பு மருந்துத் திட்டத்துக்கான தேவை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த வினியோகம் இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.





# பாரிஸ் விமான நிலையத்தின் விரிவாக்கத் திட்டம் நிறுத்தம்!

## சூழலுக்கே இனி முன்னுரிமை

பாரிஸ், பெப். 14

பூமியை சூடாக்கியதன் விளைவைத் தான் உலகம் தொற்று நோய் வடிவத்தில் அனுபவித்துக் கொண்டிருக் கிறது. சுற்றுச் சூழலைக் கணக்கில் எடுக்காமல் கண்ணை மூடிக் கொண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்திக ளால் மனித குலத்துக்கும் பூமியின் இருப்புக்கும் ஆபத்துக்களே மிஞ்சும்.

கொரோனா வைரஸுக்குப் பிந்திய உலகம் கற்றுக் கொண்ட பாடங்கள் பலனளிக்கத் தொடங்கி விட்டன.

பாரிஸின் "சார்ள் -டி- ஹோல்" (Roissy-Charles-de-Gaulle) சர்வதேச விமான நிலையத்தைப் பிரமாண்ட மான முறையில் விஸ்தரிக்கும் திட்டம் இனி சூழலுக்குப் பொருந்தாதது என்று தெரிவித்துக் கைவிடப்படுகிறது.

அரசாங்கத்தின் சுற்றுச் சூழல் கொள்கைகளைப் பொறுத்தவரை இத் திட்டம் "வழக்கொழிந்து" விட்டது என்று பிரான்ஸின் சுற்றுச் சூழல் அமைச்சர் பார்பரா பொம்பிலி தெரிவித்திருக்கிறார்.

2037 ஆம் ஆண்டு தொடக்கம் நாற்பது மில்லியன் மேலதிக பயணிகளையும் நாளாந்தம் மேலும் 450 விமானங்களையும் உள்ளடக்கும் நோக்குடன் சுமார் 7முதல் 9பில்லியன் யூரோக்கள் செலவில் நான்காவது முனையம் ஒன்றை நிறுவி விமான நிலையத்தை விரிவாக் கும் பெருந் திட்டமே கைவிடப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.கொரோனா வைரஸ் ஏற்படுத்திய நேரடி யான விளைவு இது என்று விமான நிலைய விஸ்தரிப்புக் குழு தெரிவித் திருக்கிறது.வைரஸ் நெருக்கடியை அடுத்து விமான சேவைத்துறை சந்தித்த இழப்பும் அரசு இந்தத் தீர்மானத்தை எடுப்பதில் தாக்கம் செலுத்தி யுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சூழலுக்கும் வான் வெளிக்கும் பெரும் பாதிப்புகளை உண்டுபண்ணும் விமானப் பயணங்களை அதிகரிக்க உதவும் இந்த விரிவாக்கத் திட்டத்துக்கு பலத்த எதிர்ப்பு கள் கிளம்பி இருந்தன.

தற்போது அமைச்சர் பார்பரா பொம்பிலியின் இந்தத் தீர்மானம் சூழல் பாதுகாப்பு அமைப்புக்களின தும் ஆர்வலர்களினதும் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது.

"எங்களுக்கு விமானங்கள் தேவை. ஆனால் விமானப் பயணங்கள் சூழலுக்கு நியாயமான முறையில் -காபன் உமிழ்வைக் குறைக்கும் வகையில் - இருக்க வேண்டும்"- என்று அமைச்சர் பொம்பிலி தெரிவித்திருக்கிறார்.

பருவநிலை மாறுதல், சூழல் பாதுகாப்பு ஆகியவற்று டன் ஒத்திசைவான முறைகளில் - காபன் உமிழாத நவீன விமானங்களுக்குரிய தளம் போன்ற - மாற்றுத் திட்டம் ஒன்றைத்தயாரிக்குமாறு விமான நிலைய விரிவாக்கக் குழுவை அரசு கேட்டிருக்கிறது.

"கிறீன்பீஸ்" (Greenpeace) இயக்கம் உட்பட சூழல் பாதுகாப்பு அமைப்புகள் பலவும் விஸதரிப்புத் திட்டம் கைவிடப்படுவதை வரவேற்றுள்ளன. ஆனால் பல்லாயி ரக் கணக்கானோரின் தொழில் வாய்ப்புகளைப் பறிக் கின்ற இத் தீர்மானத்துக்கு எதிர்க்கட்சி பிரமுகர்கள் சிலர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

1974 இல் நிறுவப்பட்ட பாரிஸ் "சார்ள் -டி- ஹோல்" விமான நிலையத்தை 2019 இல் 76 மில்லியன் பயணிகள் பயன்படுத்தி உள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் லண்டன் ஹீத்ரோவுக்கு அடுத்த படி யாக மிகுந்த பரபரப்பான பயணிகள் நெரிசலைக் கொண்ட விமான நிலையம் இதுவாகும்.

# மியன்மார் இராணுவ ஆட்சிக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை பேரவை தீர்மானம்!

யாங்கூன், பெப். 14

மியன்மாரில் இராணுவ ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகி உள்ளிட்ட தலைவர்களை விடுவிக்குமாறும் அங்கு மீண்டும் மக்கள் ஆட்சியை உறுதி செய்யுமாறும் வலியு றுத்தி ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மியன்மார் நிலவரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை அவசரமாகக் கூடி இந்தத் தீர்மானத்தை நிறை வேற்றியது.

பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்தை 47 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. மனித உரிகைள் பேரவை வாக்கெடுப்பின்றி ஏற்றுக்கொண்டது.

இருப்பினும் ரஷ்யாவும் சீனாவும் இந்தத் தீர்மானத் தில் இருந்து தாங்கள் விலகி இருப்பதாக அறிவித்தன.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் மியன்மாரில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையில் அதற்கெதிராக மக்கள் போராட்டம் வெடித்துள்ளது.

இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராடும் மக்களை ஒடுக்க மியன்மார் இராணுவம் அவர்கள் மீது துப்பாக் கிச் சூடு உள்ளிட்ட தாக்குதல்களை நடத்தியதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க புகைப்படங்கள் உள்ளிட்ட போதிய ஆதரங்கள் இருப்பதாக ஐ.நா. சிறப்பு அறிக்கை யாளர் தோமஸ் அண்ட்ரூஸ் கூறினார்.

இதேவேளை, மியன்மார் மீது பொருளாதாரத் தடை கள், ஆயுதத் தடைகள் மற்றும் பயணத் தடைகள் விதிக்குமாறு ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும் வலியுறுத் தப்பட்டுள்ளது.

மேலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அல்லது தற்காலிக தீர்ப்பாயங்களில் மியன்மாரை நிறுத்தி விசாரிக்கவேண்டும் என்ற கோரிக்கைகளும் பாதுகாப் புச் சபை உறுப்பு நாடுகளால் வலியுறுத்தப்பட்டுள்ளதா கவும் சிறப்பு அறிக்கையாளர் தோமஸ் அண்ட்ரூஸ்




சபைக்கு தெரிவித்தார்.

இதேவேளை, மனித உரிமைகள் பேரவைத் தீர்மா னத்தின் மூலம் நாங்கள் மியன்மார் மக்களுக்கு ஒரு வலுவான சமிக்ஞையை அனுப்ப விரும்புகிறோம். அவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் சர்வதேசம் கவனமாக உள்ளது என்ற செய்தியே அது என ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பாக ஆஸ்திரிய தூதர் எலிசபெத் டிச்சி-பிஸ்ல்பெர்கர் கூறினார்.

47 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு மியன்மார் மீது பொருளாதாரத் தடை உள்ளிட்ட கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரம் இல்லை. எனினும், அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்கள் மற்றும் பிற குற்றங்களை சுட்டிக்காட்டி அரசி யல் ரீதியிலான தாக்கத்தை ஏற்படுத்த அந்த ஆணை யத்தால் முடியும்.

இதேவேளை, மியன்மாரில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டிருப்பது அந்த நாட்டு உள்நாட்டு விவகாரம். அதனை அரசியல்படுத்தக்கூடாது என்று ரஷ்யாவும் சீனாவும் கூறி வருகின்றன. எனினும், பெரும்பாலான மேற்குலக நாடுகளும் ஐ.நா.வும் மியான்மரின் இராணுவ ஆட்சியைக் கடுமையாகக் கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்கா வைரஸ்:

# அதிதீவிரமான மறுதொற்றுடன் பிரான்ஸில் ஆஸ்மா நோயாளி!

பாரிஸ், பெப். 14

பிரான்ஸில் வைரஸின் தீவிர மான மறு தொற்றுக்குள்ளாகிய (reinfection) நோயாளி ஒருவரது விவரங்களை மருத்துவர்கள் வெளியிட்டிருக்கின்றனர்.

58 வயதான ஆண் ஆஸ்மா (asthma) நோயாளி ஒருவருக்கே நான்கு மாத இடை வெளிக்குள் இரண்டாவது தொற்றுக் கண்டறி யப்பட்டுள்ளது. தென்னாபிரிக் காவில் தொடங்கிய திரிபு மாறிய வைரஸினால் அவர் இரண்டாவது தடவை மோசமாகப் பீடிக்கப்பட் டுள்ளார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பரில் மூச்சு விட முடியாத நிலையில் மருத்துவமனைக்கு வந்த அவருக்கு முதல் முறையாக கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. சில நாட்களில் தொற்றின் அறிகுறி கள் மறைந்து அவர் குணமடைந் தார். டிசெம்பர் மாதம் இரண்டு தடவைகள் செய்யப்பட்ட பரிசோத னைகள் அவரை தொற்று அற்றவர்



என்று நிரூபித்தன.

மறுபடியும் கடந்த மாதம் (ஜன வரி) அவரை வைரஸ் தாக்கியது. இந்தத் தடவை அது உரு மாறிய புதிய வைரஸ் என்பதை ஆய்வாளர் கள் நிரூபித்தனர். தற்சமயம் அவர் செயற்கைச் சுவாசத்துடன் மிக ஆபத்தான நிலையில் இருந்து வருகிறார் - என்ற விவரத்தை பாரிஸ் மருத்துவமனைகளின் ஆய்வு முடிவுகளை வெளியிடுகின்ற மருத்துவ சஞ்சிகை தெரிவித்துள் ளது.

தென்னாபிரிக்கா, பிரேசில் போன்ற நாடுகளில் ஆரம்பித்த திரிபு வைரஸ் வகைகள் வலுவான முறையில் மறு தொற்றை ஏற்படுத் தக் கூடியன என்ற அச்சத்தை இந்த சம்பவம் நிரூபிப்பதாக மருத்து வர்கள் கருதுகின்றனர்.

பிரான்ஸில் பிரிட்டன், தென்னா பிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளின் புதிய வைரஸ் தீவிர மாகப் பரவி வருவது அவதானிக் கப்பட்டுள்ளது.பாடசாலைகள் சிலவற்றிலும் புதிய வைரஸ் தொற்றுக்கள் தெரியவந்துள்ளன.

ஜேர்மனிய எல்லையோரம் அமைந்துள்ள மொசேலி மாவட் டம் மோசமான தொற்றுப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள் ளது. அங்கு நேற்று விஜயம் மேற்கொண்ட சுகாதார அமைச்சர் ஒலிவியே வேரன், தினமும் அங்கு நூறுபேர் வரை தென்னாபிரிக்கா, பிரேசில் போன்ற புதிய வைரஸ் திரிபுகளின் தொற்றுக்கு ஆளாகி வருகின்றனர் என்ற தகவலை வெளி யிட்டார். அந்த மாவட்டத்தை நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டித்து மூடி முடக்கு மாறு கோரிக்கைகள் எழுந்துள்ளன. அங்கு தடுப்பூசி ஏற்றும் பணிகளை அரசு தீவிரப்படுத்தி உள்ளது.



# ஜோகோவிச் அடுத்த சுற்றுக்கு!

அவுஸ்ரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் 4 ஆவது சுற்றுக்கு செர்பியாவின் நோவக் ஜோகோவிச் முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று ஆட்டத்தில் நடப்பு சாம்பியனும், தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் நோவக் ஜோகோவிச் 7-6 (7-1), 6-4, 3-6, 4-6, 6-2 என்ற செற் கணக்கில் 31 ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் டெய்லர் பிரிட்சை தோற்கடித்தார்.

இதனையடுத்து அவுஸ்ரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் 14ஆவது முறையாக 4ஆவது சுற்றுக்குள் அடியெடுத்து வைத்தார் ஜோகாவிச்.

அதேபோல தரவரிசையில் 9ஆவது இடத்தில் இருக்கும் அர்ஜென்டினா வீரர் டிகோ ஸ்வார்ட்ஸ்மான் 3-6, 3-6, 3-6 என்ற நேர்செட்டில் ரஷ்யாவின் அஸ்லான் கராட்செவிடம் அதிர்ச்சி தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறினார்.

அதே சமயம் ஆஸ்திரியாவின் டொமினிக் திம், ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், பல்கேரியாவின் டிமிட்ரோவ், கனடாவின் பெலிக்ஸ் ஆஜெர் மற்றும் மிலோஸ் ராவ்னிக், செர்பியாவின் துசென் லாஜோவிச் ஆகியோர் தங்களது சுற்றுகளில் வென்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தனர்.

# இலங்கையில் 72 ஆவது விளையாட்டு அறிமுகம்

விளையாட்டுத்துறை அமைச்சினால் 72 ஆவது விளையாட்டாக அறிமுகப்படுத்திய கால் மேசை பந்தாட்டம் (TeqBall) முதல் தடவையாக வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்பாளராக சிவா ஜீவிந்தன் இலங்கை ரெக்பந்தாட்ட சம்மேளனம் நியமித்துள்ளது. இந்த நிகழ்வுக்கு இலங்கை ரெக் சங்கம் சார்பாக இலங்கைக்கான ரெக்பந்தாட்ட அபிவிருத்தி முகாமையாளர் சிவராஜா கோபிநாத், சம்மேளனத்தின் உயர் அதிகாரிகள் ரஞ்சித் மற்றும் மருத்துவர் கணேசநாதன் ஆகியோரும் பங்கேற்றனர்.



இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் பங்கேற்றார்.

நிகழ்வில் வடமாகாண விளையாட்டு கழகங்களுக்கு 15 லட்சம் ரூபா பெறுமதியான ரெக்பந்தாட்ட உபகரணங்களை கையளித்து ரெக்பாந்தாட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இரண்டு ரெக்பந்தாட்ட மேசை வழங்கப்பட்டன.

# பெண் நடுவர்களுடன் கைகுலுக்க மறுத்தார் கட்டார் நாட்டு இளவரசர்



கழக உலகக் கிண்ண உதைபந்து போட்டி நடுவர்களுக்கு விருது வழங்கும் விழாவில் கட்டார் இளவரசர் பெண் நடுவர்களுடன் கைகுலுக்க மறுப்பு தெரிவிக்கும் காணொளி வைரலாகி வருகின்றது.

கட்டாரில் டைக்ரஸ் யு.ஏ.என்.எல் அணிக்கும் பேயர்ன் மூனிச் அணிக்கும் இடையிலான போட்டியில் சிறப்பாகப் பணியாற்றிய நடுவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இதன்போது ஆண் நடுவர்களுக்கு விருது வழங்கிய கட்டார் இளவரசர் ஷேக் ஜோஆன் பின் ஹமாத் அல் தானி, பெண் நடுவர்களுக்கு கைகுலுக்க மறுத்துவிட்டார். இஸ்லாமியச் சட்டப்படி அன்னியப் பெண்களைத் தொடக்கூடாது என்பதால் அவர் அப்படி நடந்து கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை வீரர்களுக்கு 2 கிலோ மீற்றர் தூரம் உடற்தகுதி சோதனை







இலங்கை கிரிக்கெட் அணியிலுள்ள வீரர்களுக்கான உடற்தகுதியை பரிசோதிப்பதற்கான திட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

2 கிலோ மீற்றர் தூரத்தை ஓடி கடப்பதற்கான சோதனையே இவ்வாறு சுகததாஸ விளையாட்டரங்கில் முன்னெடுக்கப்பட்டது.

மேற்கிந்திய தீவுகள் அணியுடனான தொடரில் விளையாடுவதற்காக தெரிவு செய்யப்பட்ட இலங்கை அணியின் 36 வீரர்களுக்கு இவ்வாறு சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், இதில் 32 வீரர்கள் பங்குப்பற்றியதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஏற்கனவே பின்பற்றப்பட்டு வந்த யோ - யோ முறைமைக்கு பதிலாக இந்த புதிய உடற்தகுதி சோதனை முறைமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2 கிலோமீற்றர் தூரத்தை 8 நிமிடமும் 35 விநாடிகளில் ஓடி முடிக்கவேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. பந்துவீச்சாளர்கள், துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் விக்கெட் காப்பாளர் உள்ளிட்டவர்களுக்கு வெவ்வேறு நேர இலக்கு வழங்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சோதனையில் தோல்வியுறும் வீரர்கள் 40 நாட்களுக்குள் மீண்டும் தமது உடற்தகுதியை நிரூபிக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் இருபதுக்கு 20 உலகத்தொடருக்கு முன்னர் அணி வீரர்களின் உடல் தகுதியை மேம்படுத்துவதே நோக்கமாக அமைந்துள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் உடல் செயல்திறன் தொடர்பான முகாமையாளர் கிராண்ட் லுடன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தச் சோதனையில் நான்கு வீரர்கள் பங்கேட்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குசல் மெண்டிஸ், தனஞ்ச டி சில்வா, அவிஸ்க பெர்னாண்டோ மற்றும் லஹிரு திரிமான்ன ஆகியோரே இவ்வாறு சோதனையில் பங்கேட்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாப்போலியை வென்று இறுதிப் போட்டியில் அத்லாண்டா

இத்தாலியக் உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான கோப்பா இத்தாலியா தொடரின் இறுதிப் போட்டிக்கு அத்லாண்டா தகுதி பெற்றுள்ளது.

நாப்போலியின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டி 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்த நிலையில், அத்லாண்டாவின் மைதானத்தில் நேற்று முன் தினம் அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் வென்ற அவ்வணி, 3-1 என்ற மொத்த கோல் கணக்கில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அத்லாண்டா சார்பாக, மட்டியோ பெஸ்ஸினா இரண்டு கோல்களையும், டுவான் ஸபட்டா ஒரு கோலையும் பெற்றனர். நாப்போலி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹிர்விங் லொஸானோ பெற்றிருந்தார்.



# பல போராட்டங்களுக்கு மத்தியில் உருவாக்கிய அரசிலிருந்து நாம் ஒருபோதும் விலகமாட்டோம்

## ஆனால், ஆளும் கூட்டணிக்குள் நிலவும் முரண்பாட்டுக்கு தீர்வு அவசியம் - திஸ்ஸ



கொழும்பு,பெப்.14

**பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் நாம் உருவாக்கிய அரசாங்கத்திலிருந்து ஒருபோதும் விலகமாட்டோம். ஆனால், பொதுஜன பெரமுன தலைமையிலான ஆளும் கூட்டணியில் தற்போது உருவாகியுள்ள கருத்து முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும். அதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுக்கின்றோம்.**

இதேவேளை, ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும். முரண்பட்டுக் கொண்டால் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்சவின் இல்லத்தில் இடம்பெற்ற விஷேட சந்திப்புக்கள் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியிலுள்ள பிரதான கட்சிகளுக்கு எதிராக வெறுக்கத்தக்க பேச்சுக்களை வெளியிடுவதை அவதானிக்க முடிகின்றது. அமைச்சர் விமல் வீரவன்ச தொடர்பில் பொதுஜனபெரமுனவின்பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்ட கருத்து கூட்டணிக்குள் மாறுபட்ட கருத்துக்களை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டணிக்குள் நிலவும் கருத்து முரண்பாடுகளை கொண்டு நாங்கள் அரசாங்கத்தை விட்டு விலகுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. பெரும் போராட்டத்துக்கு மத்தியில் நாங்கள் உருவாக்கிய அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கு எவ்வித அவசியமும் எமக்குக் கிடையாது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட முன்னின்று செயல்பட்டவர்கள் என்ற ரீதியில் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளது.

இதற்கு பேச்சுக்களின் மூலமே உரிய தீர்வைக் காண வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்துள்ளோம்.

கருத்து முரண்பாடுகளுக்குத் தீர்வைக் காணாவிடின் கூட்டணிக்குள் முரண்பாடுகளே தொடரும். அதற்கு இடமளிக்க முடியாது.

ஆளும் தரப்புக்குள் ஏற்பட்டுள்ள பிரச்னையைக் கொண்டு எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிளை நிறைவேற்ற வேண்டுமாயின் ஆளும் தரப்பினர் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும். இல்லாவிடின் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும்- என்றார். (எ)

## பாகிஸ்தான் – இலங்கை இடையே மேலும் சில புரிந்துணர்வு ஒப்பந்தம்

கொழும்பு,பெப்.14

இலங்கை அரசாங்கம், பாகிஸ்தானுடன் மேலும் சில புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 22 ஆம் திகதி பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, பாகிஸ் தான் பிரதமரின் விஜயத்தின் போது ஏற்கனவே உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும் எனக் கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற இலங்கை தீவிர இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நேரத்தில் பிரதமர் இம்ரான் கானின் இந்தப் பயணம் இடம்பெறுகின்றது.

பாகிஸ்தான், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவாகத் தொடர்ந்தும் செயல்பட்டு வருகின்றது. (எ)

# பிரதமர் மஹிந்தவின் அறிவிப்பு அரசின் நிலைப்பாடு இல்லையா?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு,பெப்.14

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்யும் விவகாரத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இவ்விடயத்தில் பாராளுமன்றத்தில் பிரதமர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது என்றால், அவரின் கருத்து அரசாங்கத்தின்நிலைப்பாடல்ல என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

சடலங்களை அடக்கம் செய்யும் விவகாரத்தில் அரசாங்கத்துக்குள்ளேயே இருவேறு நிலைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. இதுதொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு



குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்யும் விவகாரத்தில் அரசியல்வாதிகள் கருத்துக்கூற முடியாது. மாறாக இவ்விடயத்தில் தேர்ச்சிபெற்ற விஷேட நிபுணர்கள் அபிப்பிராயத்தை அரசாங்கம் வெளியிட வேண்டும். எனினும் அதனைச் செய்வதில் அரசாங்கம் ஏன் தொடர்ந்தும் தயக்கம் காட்டுகின்றது என்ற சந்தேகம் பொது மக்களிடத்தில் உள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பில் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த பிரதமர், அதற்கு அனுமதி வழங்கப்படும்- என்றார். எனினும் இவ்விடயத்தில் விஷேட நிபுணர்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாகவே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவ்வாறெனில், சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிப்பதாக பிரதமரால் வெளியிடப்பட்ட கருத்து பொறுப்பற்ற தன்மையைப் புலப்படுத்துகின்றதா? இவ்விடயத்தில் பிரதமரின் வாக்குறுதியை நடைமுறைப்படுத்த முடியாதெனில், அவரால்வெளியிடப்பட்ட கருத்து அரசாங்கத்தின் நிலைப்பாடல்ல என்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்- என்றார். (எ)

# சட்டத்தை தலைகீழாக மாற்றிவிட்டது அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு

## பிரதமர் தோல்வி என்கிறார் மத்தும பண்டார



கொழும்பு,பெப்.14

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மூலம் சட்டம் தலைகீழாக மாற்றப்பட்டு விட்டது. இவ்வாறு நீதியையும், நீதித்துறையையும் சீரழிப்பதற்கு எதிராக எதிர்த்தரப்பிலுள்ள சகலருடனும், இணைந்து கலந்தாலோசித்து செயல்பட ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் தயாராகவே உள்ளது என அதன் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பிரதமரால் கூறப்படுகின்ற விடயங்கள் ஏனைய தரப்பினரால் மறுக்கப்படுகின்றன.

கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பில் பிரதமராலும், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயாலும் கூறப்பட்ட கருத்துக்கள் அரசாங்கத்துக்குள் காணப்படுகின்ற முரண்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. தற்போது அரசாங்கமும் தோல்வியடைந்துள்ளது. பிரதமரும் தோல்வியடைந்துள்ளார்.

சட்டத்தை தலைகீழாக்கி அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மூலம் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீதியையும், நீதித்துறையையும் சீரழிப்பதற்கு எதிராக எதிரத்தரப்பின் அனைத்துக் குழுக்களுடனும் இணைந்து கலந்தாலோசித்து நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயாராகவுள்ளோம்.

மரணதண்டனைவிதிக்கப்பட்டுள்ள பிரேமலால் ஜெயசேகரவுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள இடமளித்து, ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அதற்கான உரிமையை வழங்காமை நியாயமற்ற செயல்பாடாகும். சபாநாயகர் இவ்வாறு பக்கச்சார்பாக செயல்படுவது பொறுத்தமற்றதாகும்.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது தான் மின்சாரக் கதிரையில் அமர்ந்துள்ளதாகக் கூறினார். எனினும் 2015 இல் ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாம் அந்த நிலைமையை மாற்றியமைத்தோம்- என்றார். (எ)

# தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய மூவாயிரத்து 95 பேர் இதுவரை கைது

கொழும்பு,பெப்.14

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிச் செயல்பட்ட மூவாயிரத்து 95 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை தொடர்பிலேயே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் அனைவருக்கும் எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் தனிமைப் படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்டவிதிகளைப் பின்பற்றாத, அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தொடர்பில் சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# யாழில் மீண்டும் கொரோனா கொத்தணி உருவாகலாம்



## சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக்க மக்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,பெப்.14

**யாழில் மேலும் கொரோனா கொத்தணி உருவாகும் அச்சநிலை ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுவது அவசியம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் அறிவுறுத்தியுள்ளார்.**

அச்சுவேலி சந்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நான்கு வியாபாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்று நிலைமை சற்றுக்குறைவடைந்து சென்ற நிலையில் கடந்த 11 ஆம் திகதியும், நேற்று முன்தினமும் திடீரென தொற்று உறுதி செய்யப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது.

கடந்த 11 ஆம் திகதி 200 ஆக காணப்பட்ட தொற்று உறுதியானோர் எண்ணிக்கை நேற்று முன்தினம் 206 ஆக அதிகரித்திருக்கின்றது. இதில் நான்கு பேர் அச்சுவேலி சந்தை வியாபாரிகள் மற்றும் பஸ் நடத்துநரின் மனைவி, பிள்ளை என 6 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எனவே, யாழ். மாவட்ட மக்கள் மிகவும் அவதானமாகச் செயல்பட வேண்டும். யாழ். மாவட்டத்தில் அனைத்துச் செயல்பாடுகளையும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியிருந்தோம்.

சகல நடவடிக்கைகளும் வழமைபோல் இடம்பெற்று வருகின்ற நிலையில், இறுக்கமான சுகாதார நடைமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன. சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வழமையான செயல்பாடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் பொதுமக்கள் இந்த நிலைமையில் மிகவும் அவதானமாகச் செயல்பட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அச்சுவேலிப் பகுதியில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுக்கு எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அடிப்படையிலேயே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும் சுகாதாரப் பிரிவினரால் தொடர்ந்து இந்தப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக அச்சுவேலிப் பகுதியில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் வெளி மாவட்டத்திலுள்ள சந்தைகளுடன் தொடர்புபட்டதன் காரணமாகவே தொற்று ஏற்பட்டு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

அத்தோடு அச்சுவேலி சந்தைப் பகுதியில் உள்ள வியாபாரிகள் மற்றும் அந்த வியாபாரிகளுடன் தொடர்புடையவர்களுக்கு பி.சி. ஆர். பரிசோதனைநடவடிக்கையை சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, பொதுமக்கள் இனி வரும் நாள்களில் சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக பின்பற்றி செயல்பட வேண்டும். தற்போதைய நிலைமையானது மேலும் கொத்தணி உருவாகும் ஒரு நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது.

அத்தோடு தற்போது அனைத்துச் செயல்பாடுகளும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பாடசாலைகள், மதத்தலங்கள், ஏனைய பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களில் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு தற்பொழுது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அபாய நிலையை உணர்ந்து பொதுமக்கள் செயல்பட வேண்டும்.

குறிப்பாக பஸ்களில் பயணிப்போர் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களுக்கு செல்வோர் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆட்டோ சாரதிகள் மிகவும் அவதானமாகச் செயல்பட வேண்டும். எனினும் தற்போதுள்ள நிலையில் அச்சுவேலி சந்தையை மூடுவதற்கு எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. எனினும் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்- என்றார். (எ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையை கையளிக்க கோருகின்றது பொதுபல சேனா

## ஊடகச் செய்தியால் கடும் சீற்றம்

கொழும்பு,பெப்.14

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் சாராம்சத்தை பொதுபலசேனா அமைப்புக்கு உடன் வழங்க வேண்டும். அல்லது பொதுபல சேனா அமைப்பு தொடர்பில் ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை முன்னெக்க வேண்டும் என வலியுறுத்தி பொதுபல சேனா அமைப்பின் ஊடகச் செயலாளர் ஜனாதிபதி செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் கடந்த 2019.04.21 ஆம் திகதி நடத்தப்பட்ட தொடர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் பொதுபல சேனா அமைப்பு மற்றும் ஞானசார தேரருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது என பிரதான ஊடகம் ஒன்று தலைப்புச்செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை அந்த ஆணைக்குழுவின் தலைவரால் ஜனாதிபதிக்கு மாத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை பாராளுமன்றத்துக்கோ, ஏனைய தரப்பினருக்கோ இதுவரையில் வழங்கப்படவில்லை. எமது அமைப்பு தொடர்பில் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படும் விடயங்கள் ஊடகங்கள் வாயிலாக வெளியாகியுள்ளமை பொது பலசேனா அமைப்புக்கு இழைக்கும் அநீதியாகவே கருத முடியும்.

பொதுபல சேனா அமைப்பு தொடர்பில் பிரதான ஊடகத்தில் வெளியாகியுள்ள செய்தியை ஆணைக்குழுவின் உறுதிப்படுத்தப்பட்ட தகவலாகவே அந்த ஊடகம் உறுதிப்படுத்தியுள்ளது. இந்தச்செய்தி மக்கள் மத்தியில் மாறுபட்ட கருத்தை தோற்றுவித்துள்ளது. எனவே இந்த விடயம் தொடர்பில் எமது அமைப்பின் சார்பில் சாட்சியங்களை பெறுவது அவசியமாகும் - என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தில் 8 இடங்களில் நடத்தப்பட்ட தொடர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினர் கடந்த மதம் 31 ஆம் திகதி விசாரணை அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் கையளித்தனர். (எ)

# இலங்கை மீது இந்தியாவுக்கு அதிருப்தி உருவாகியிருக்காது

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை



கொழும்பு,பெப்.14

இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்ட விரோதச் செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கை தொடர்பில் இந்தியா எமது நாட்டின்மீது அல்லது அரசாங்கத்தின் மீது அதிருப்தியாக இருக்கும் என்று நான் கருதவில்லை. காரணம், இந்த விவகாரத்தில் இருக்கக்கூடிய நியாயத் தன்மை தொடர்பில் இந்தியாவுக்கு நல்ல புரிதல் இருக்கின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின்போது, இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரம் மற்றும் கொழும்புத் துறைமுக விவகாரம் போன்றவற்றில் இந்தியா திருப்தியாக இல்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றனவே. இந்நிலை தொடர்பில் தங்களது கருத்து என்ன? என எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: இந்த விவகாரத்தை தீர்த்து வைப்பதற்காக தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவே அமைச்சு அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்கள் ஆரம்பித்துள்ள நிலையில், கொள்கை ரீதியான முடிவுகளை மேற்கொள்வதற்கான அமைச்சர்கள் மட்டப்பேச்சுக்கள் தொடர்பான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அதேநேரம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நீண்ட வரலாற்றுத் தொடர்பு இருக்கின்றது. உணர்வுகளால் உறவுகளால் கலாசாரத் தொடர்புகளால் இரண்டு நாடுகளுக்கும் இடையில் இருக்கும் நெருக்கம் பிரிக்கப்பட முடியாதது.

அது மாத்திரமன்றி, பூகோள அரசியல் ரீதியிலும் இலங்கையின் அமைவிடம் இந்தியாவுக்கு முக்கியமானது. அதேபோன்று இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கு இந்தியாவுடனான உறவு அவசியமானது. எனவே இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவு என்பது எப்பொழுதும் பலமானதாகவே இருக்க வேண்டும்.

ஆனால், நல்லாட்சி என்று பெயரளவில் செயல்பட்ட கடந்த ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்தை நடத்தியவர்கள் ஏற்படுத்திய குழப்பங்களில் ஒன்றுதான் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரம்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிடம் கையளித்தார்கள். அதேபோன்று கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் வழங்குவது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட்டார்கள். இவ்வாறு

பூகோள அரசியலை கையாளும் திறனற்ற சில தீர்மானங்களால் எமது நாட்டை சுற்றிக் குழப்பங்களை உருவாக்கி வைத்திருக்கின்றனர்.

அதேவேளை, கடந்த அரசாங்கம் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறாக தற்போதைய அரசாங்கம் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளுமாயின், அது பூகோள அரசியல் சார்ந்த சிந்தனையின் அடிப்படையில் இந்தியாவுக்கு தற்போதைய அரசாங்கம் தொடர்பாக தவறான புரிதலையும் ஏற்படுத்தும் என்பதை அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில்தான், அண்மையில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று துறைசார் அமைச்சரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதில் 51 வீதமான உரிமை இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் 49 வீதமான பங்குகளை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தொழிற்சங்கங்கள் இந்த முனையத்தின் ஒரு பகுதியைக் கூட வெளியாருக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்க முடியாது என்ற நிலைப்பாட்டில் இருப்பதாகத் தெரிவித்தன.

50 வருட கால அரசியல் அனுபவத்தில் தொழிற்சங்கப் போராட்டங்கள் பலவற்றை வெற்றிகரமான தீர்த்து வைத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலிலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலும் செயல்பட்டு வருகின்ற தற்போதைய அரசாங்கம் இந்த விவகாரத்தை வெற்றிகரமாக கையாளும் என்று நம்புவதாகவும் தெரிவித்தார். (எ)

# சிறைக்குள் வீசப்பட்ட பொதி மீட்பு



களுத்துறை, பெப்.14

களுத்துறை சிறைச்சாலை மதிலுக்கு மேலால் வீசப்பட்ட பொதி ஒன்றை சிறைச்சாலை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அந்தப் பொதியிலிருந்து 3 தொலைபேசிகள், சிறுதொகை கஞ்சா, ஹெரோயின், 4 புகையிலைகள், 5 லைட்டர்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. (எ)

ஈழநாடு
Eelanadu

# 100 ரூபாய்க்கு மேல் அரிசி விற்க முடியாது

## அமைச்சர் பந்துல திட்டவட்டம்

வவுனியா,பெப்.14

**நெல்லை என்ன விலைக்கு கொள்வனவு செய்தாலும், அரிசியை 100 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்வற்கு அரசாங்கம் இடமளிக்காது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**



வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலகட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை நாம் மீளப்பெறாது இருந்தோம். பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தோம். 5 மில்லியன் ரூபாய் நிதியில் மினி கோப்சிற்றி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால், கடந்த ஆட்சிக்காலத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குரிய வேலைகள் எதுவும் செய்யப்படாமல் கிடப்பில் போடப்பட்டன. எதிர்க் கட்சியினர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை சரியான முறையில் செயல்படுத்தவில்லை. அவர்கள் தனியார் வர்த்தகர்கள் இயங்குவதற்கான வசதிகளை செய்தார்களே தவிர, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மூலம் நாட்டுக்குத் தேவையானவற்றை செய்ய அவர்கள் முயற்சிக்கவில்லை. இதனால் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிறைய பிரச்னைகளுக்கு முகம் கொடுத்தன. எமது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகபடியான வாக்குளால் வெற்றி பெற்ற பின் நாட்டுக்கும், மக்களுக்கும் தேவையானவற்றை செய்வதற்கு எதிர்பார்த்திருந்தார். ஜனாதிபதியின் சிந்தனையின் கீழ் மக்களுக்கான பொருள்கள் சேவைகளின் விலையைக் குறைத்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது தான் நோக்கம். கடந்த ஆட்சிக் காலத்தில் நாட்டுக்குத் தேவையான உற்பத்திகளை செய்யாது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது தான் அவர்களின் நோக்கமாக இருந்தது.

அரிசி, உளுந்து, பயறு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் இல்லாமல் தேவையில்லாத பொருள்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொண்டிருந்தார்கள். தமது பொருள்களை விற்பனை செய்ய முடியாமலும், நியாய விலையில் பொருள்களைப் பெற முடியாமலும் மக்கள் பிரச்னைகளை எதிர்நோக்கினர். ஜனாதிபதியின் முடிவுக்கு ஏற்ப எமது நாட்டில் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டிலிருந்து எந்தவொரு ஆட்சியாளரும் எடுக்க முடியாத பெரியதொரு விடயத்தை இதன் மூலம் ஜனாதிபதி செய்துள்ளார். மஞ்சள், கௌப்பி, பயறு போன்றன தற்போதும் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் நீங்கள் என்ன விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்தாலும், அரிசி 100 ரூபாய்க்கு மேல் எமது ஆட்சிக் காலத்தில் விற்பனை செய்ய அனுமதிக்க மாட்டோம். அரசாங்கம் விவசாயிகளுக்கு நிறைய விடயங்களை செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறது. மானிய உரம், இலகு கடன் திட்டம், அரிசி கட்டுப்பாட்டு விலை என பல்வேறு செயல்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். அரிசியை மக்களுக்கு நியாயமான விலையில் பெற்றுக்கொடுப்பதற்கான செயல்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம்- என்றார். (எ)

# அரசாங்கத்தின் விளையாட்டு ஜெனிவாவில் செல்லுபடியாகாது

## வேலுகுமார் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்.14

இலங்கைக்குள் விளையாடுவதைப் போன்று ஜெனிவாவில் அரசாங்கத்தால் விளையாட முடியாது. விளையாட்டுக்களின் மூலம் உள்நாட்டு மக்களை ஏமாற்றினாலும், சர்வதேசத்தை ஏமாற்ற முடியாது. எனவே நேர்மையாகச் செயல்பட வேண்டும். வெளிநாட்டுக் கொள்கைகளை முறையாகப் பேண வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வெளிநாடுகளுக்கு தேசிய சொத்துக்களை விற்பதற்கு நாம் ஒருபோதும் ஆதாரவளிக்க மாட்டடோம். ஆனால், இராஜதந்திர தொடர்புகளை சுமுகமாக பேண வேண்டியது அத்தியாவசியமாகும். எனினும் அரசாங்கம் அதனை முறையாக பேணுவதாகத் தெரியவில்லை. ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும், வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடமும் அரசாங்கம் பின்பற்றும் வெளிநாட்டுக் கொள்கை என்ன என்று வினவுகின்றோம்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் தொடர்பில் ஜனாதிபதி கூறிய கருத்துக்களும் அதற்கு வெளியிடப்பட்டுள்ள எதிர்ப்புக்களும், விமல் வீரவன்சவின் செயல்பாடுகளும் அரசாங்கத்தின் ஸ்திரமற்ற செயல்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. மறுபுறம் அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகளைக் குறைப்பதாகக் கூறிக்கொண்டு விலையை அதிகரித்துள்ளனர்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதிக பலத்தைக் கொண்டுள்ள அரசாங்கத்துக்கு வெறும் 20 கம்பனிகளைக் கட்டுப்படுத்த முடியாதா? பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பளம் பெற்றுக் கொடுக்கப்படும் என்று கூறிய உடனேயே பெருந்தோட்டக் கம்பனிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. அரசாங்கமும் கம்பனிகளுடன் இணைந்தே செயல்படுகின்றது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

இலங்கைக்குள் அரசாங்கம் எவ்வாறு வேண்டுமானாலும் விளையாடலாம். ஆனால் ஜெனிவாவிலும் அதே விளையாட்டை காண்பிக்க முடியாது. - என்றார். (எ)

அருந்ததி
இணைய திருமண சேவை

மணமகன் விபரம்

16655 | வே | 1989
மானிப்பாய் | இந்து | கி.பா : 28
Accountant | விசாகம்(துலாம்)
Australia | 178செ.மீ

17555 | வே | 1991
சண்டிலிப்பாய் | இந்து | செவ் :06
Network Engineer | Sri Lanka
மூலம்(தனுசு) | கி.பா:1.75 | 183செ.மீ

16078 | கோ | 1982
கொடிகாமம் | இந்து |
Conductor | Sri Lanka
அத்தம்(கன்னி) | 178செ.மீ

16015 | வி | 1990
தாவடி | இந்து |
Proprietor | Sri Lanka
சதயம்(கும்பம்) | 175செ.மீ

16772 | வே | 1987
கந்தரோடை | இந்து | லக்.செவ்
Sri Lanka | Driver
சதயம்(கும்பம்) | 168செ.மீ

மணமகள் விபரம்

17351 | வே | 1978
சங்கானை | இந்து
N/A | Sri lanka
கார்த்திகை(ரிஷபம்) | 160செ.மீ

17465 | தே | 1969
வத்தளை | கிறிஸ்தவம்
Teacher | Sri Lanka
பூரட்டாதி(கும்பம்) | 158செ.மீ

17531 | வே | 1974
Widowed | சாவகச்சேரி | செவ்-02
Sri Lanka | பூரட்டாதி(கும்பம்)
Receptionist | 152செ.மீ | இந்து

17516 | வே | 1975
பருத்தித்துறை | இந்து | Sri Lanka
Branch Manager | செவ்-08
புனர்பூசம்(மிதுனம்) | 162செ.மீ

17630 | வே | 1979
Divorced | காரைநகர் | இந்து
Computer Typist | Sri lanka
பூராடம்(தனுசு) | செவ்-08 | 165செ.மீ

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# உறுதியான நடவடிக்கை எடுக்க ஐ.நாவுக்கு துணிச்சல் இல்லை

## முன்னாள் உதவிச் செயலாளர் விசனம்

ஜெனிவா, பெப்.14


இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான துணிச்சல் ஐ.நாவிடம் இல்லை. எனவே, ஐ.நாவை இனியும் நம்பியிருக்கக்கூடாது என ஐ.நா. குழு ஒன்றின் முன்னாள் உதவிச் செயலாளர் நாயகம் சார்ல்ஸ் பீற்றர் தெரிவித்துள்ளார்.

உலகத் தமிழர் பேரவை, மனித உரிமைகள் மற்றும் சர்வதேச நீதிக்கான நிலையம், இலங்கையில் நீதி மற்றும் சமாதானத்துக்கான பரப்புரை. கனேடிய தமிழ்க் காங்கிரஸ் ஆகியன இணைந்து முன்னெடுத்த இணையவழி கருத்தரங்கில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இலங்கை விவகாரத்தில் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான துணிச்சல் ஐ.நாவுக்கு இல்லை என அவர் தனது உரையில் தெரிவித்ததுடன். இலங்கை விவகாரத்தை கையாள்வதற்கான அமைப்பு முறை தன்னிடம் இல்லை என ஐ.நா. தெரிவிக்க முடியாது. அதனை நாம் எதிர்பார்க்கவும் முடியாது.

கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும் சரியான விடயங்களை செய்ய விரும்பும் அதிகாரிகள் உள்ளனர். எனினும் ஐ.நாவுக்கு நடவடிக்கை எடுப்பதற்கான துணிச்சல் இல்லை. இலங்கை மக்கள் ஐ.நாவை நம்பியிருக்கக்கூடாது.

ஐ.நாவை நம்பியிருந்தால் இலங்கை மக்கள் ஏமாற்றமடைவார்கள். இலங்கை மக்கள் தங்கள் உறுதிப்பாட்டில் நிலையாகயிருந்தால் ஐ.நா. செயல்பாட்டால் எதிர்பாராத வெற்றிகள் கிடைக்கலாம்- என்றார்.



இலங்கையில் போர் இடம்பெற்ற போதும், அதன் பின்னரும் ஐ.நா. எவ்வாறு செயல்பட்டது என்பதை அராய்வதற்காக ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த குழுவின் தலைவராக சார்ல்ஸ் பீற்றர் பணியாற்றியிருந்தார். (எ)

# மேலும் 847 பேர் பூரண குணம்

கொழும்பு,பெப்.14

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுள் நேற்று மேலும் 847 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 67 ஆயிரத்து 831 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதே வேளை கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 380ஐ தாண்டியுள்ளது. (எ)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை - தற்காப்புக்கலை



**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி - தாஜ்மஹால் -
காதலர்தின சிறப்பு திரைப்படம்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : காதல் சடுகுடு - காதலர்தின
சிறப்பு நிகழ்ச்சி



7.00 மணி : SPOT LIGHT
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம் - காதலர் தின சிறப்பு
10.00 மணி : பதிவு - ஏ.எல்.எம்.உவைஸ்
(ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன முஸ்லிம்
சம்மேளன தேசிய அமைப்பாளர்)




**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே
(நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்ரஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.30 மணி : சைவசமயம்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் தெல்லிப்பழை
துர்க்காதேவி ஆலய திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் மாவிட்டபுரம்
ரஜா ரஜேஸ்வரி ஆலய திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் தெல்லிப்பழை
துர்க்காதேவி ஆலய திருவிழா

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : நசரேத்தூர்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.